AHARAM
# அகரம்
எண்: 11 எழுத்து: 04 ஏப்ரல் - 2017 | ரஜப் 1438




19 APR 2017
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடங்குமா டெங்கு? ஓயுமா ஓலம்?


ஒரு பயங்கரமான சுனாமியாக சுழன்று வீசுகிறது டெங்கு அலை. அரசாங்கம் அதிர்ந்து, மக்கள் பீதியில் உறைந்திருக்கின்றனர். இந்நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கிண்ணியாவில் 15 உயிர்கள் பலியாகி 1800 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். அது மாத்திரமின்றி, நாடளாவிய ரீதியில் பல பாகங்களிலும் டெங்கு தன் அட்டகாசத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

**டெங்கை ஒழிக்க நாம் செய்ய வேண்டியது என்ன?**

- டெங்கு நோயை ஒழிக்க அது உருவாகும் வழிகளை அழிக்க வேண்டியது அவசியமாகும்.
- நீர் தேங்கும் இடங்கள் அழிக்கப்பட்டு வடிகான்கள் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
- டெங்கு பற்றிய விழிப்புணர்வை சமூகத்திற்கு வழங்க வேண்டியது நமது கடமையாகும்.
- டெங்கு பயங்கரமாக தாக்கத் துவங்கி அழிவுகளை ஏற்படுத்தும்போதே மக்கள் விழிப்படைந்து அதனைத் தடுக்கக் கூடிய வழிவகைகளை மேற்கொள்கின்றனர். அதற்கு முன்பாக வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும் என்ற வகையில், நாம் டெங்கு பற்றிய விழிப்புணர்வுகளை வழங்க வேண்டும்.
- டெங்கு பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அது பற்றிய எச்சரிக்கை நிகழ்வுகளை நமது பாடசாலைகளில் ஏற்பாடு செய்ய வேண்டும். அது தொடர்பான சுவரொட்டிகளை வீதிகளில் காட்சிப்படுத்த வேண்டும். அதே போன்று, பொருத்தமான வீதி நாடகங்களையும் ஏற்பாடு செய்யலாம்.
- டெங்கு ஒழிப்பில் அரசாங்கத்திற்கு நம் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அவர்களின் வழிகாட்டல்களின்படி நமது சூழலை செப்பனிட வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில் டெங்கு ஒழிப்புடன் தொடர்பான அதிகாரிகளை அணுகி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- டெங்கு நோயின் அறிகுறிகள் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். சாதாரண காய்ச்சல் என பொடுபோக்காக இருந்து விடாமல் நாம் உடனடியாக மருத்துவரை அணுகி உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- உயிர் கொல்லியான டெங்கை அவ்வப்போது அழிக்க முனைவதை விட, அதனை ஒட்டுமொத்தமாக நமது தாய் தேசத்திலிருந்து விரட்டியடிக்க நாம் பாடுபட வேண்டும். நமது இளம் கண்டுபிடிப்பாளர்கள் இத்துறையில் தமது சாதனைகளை நிலைநாட்டி நாட்டைக் காப்பாற்ற முயல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



06

**17 ஆம் நூற்றாண்டு முதலே கினிப் பன்றிகள் மீது உயிரியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1960 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் ஆண்டுதோறும் சுமார் 2.5 மில்லியன் கினிப் பன்றிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.**



22




24


AHARAM அகரம்

எண்: 11 - ஏப்ரல் : 2017 - எழுத்து: 04







32



38


சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர் M.Ed

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்


## பாடத்திட்டம்



| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| வரலாறு | 20 |
| அரபு மொழி | 14 |






36


தொடர்புகளுக்கு:

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com



சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம் எதிர்காலத்திற்கான முதலீடு!

உலகில் ஒரு மனிதனுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள அருள்களுள் நேரம் முதன்மையானது. ஒரு மனிதனின் இம்மை-மறுமை வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தி நேரத்திற்கு இருக்கிறது. மனித ஆயுள் வரையறுக்கப்பட்டது. எனவே, அதில் வெற்றி-தோல்வியைத் தீர்மானிப்பதில் காலம், நேரம் என்பவற்றின் பயன்பாடு மிக இன்றியமையாதது. ஒரு மனிதனின் வாழ்வின் இலக்கு நேரத்தோடு ஒன்றாய் செல்லும்போதே அது சாதனையாக மாறுகிறது, இல்லையேல் தோல்வியடைகிறது.

காலம், நேரம் மனிதனுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ள ஓர் அமானிதம். இது ஏனைய பொருள்சார்ந்த அமானிதம் போலன்றி, தனித்துவம் மிக்கது. சிலபோது மனிதன் ஏனைய பௌதிக வளங்களை தனது ஆற்றல் மூலம் கட்டுப்படுத்தவும் மீள பெற்றுக் கொள்ளவும் சக்தி உடையவனாக இருக்கிறான். எனினும், நேரம் என்ற வளத்தினை அவ்வாறு கட்டுப்படுத்தவோ, இழந்ததை மீளவும் பெற்றுக் கொள்ளவோ முடியாது. மாற்றமாக, நேரத்தை எவ்வளவு தூரம் திட்டமிட்டு உச்ச நிலையில் பயன்படுத்துகிறோமோ அதிலேதான் நாம் வெற்றியாளர்களாக தடம்பதிப்போம்; இல்லையேல் எமது நோக்கம் தோல்வியைத் தழுவுவது தவிர்க்க இயலாதது.

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி, ''ஒருவன் நேரத்தை வீணடிப்பது என்பது அவன் தன்னைத் தானே கொலை செய்வதாகும். இது மக்கள் பார்த்திருக்க மெதுவாக நடைபெறும் ஒரு தற்கொலைக் குற்றமாகும். ஆனால், இதற்கு எவரும் தண்டனை வழங்குவதில்லை'' என்றார்.

நாம் வியாபார நடவடிக்கைகளில் பணத்தை முதலீடு செய்வதனால் இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. அவ்வாறே, எமது வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால் நேரத்தினை முதலீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாதது. ஸூரதுல் அஸ்ர் இரண்டு விதமான மனிதர்களைக் குறிப்பிடுகிறது. ஒரு சாரார், ஆயுளை அவர்களின் விருப்பத்தின் பேரில் நுகர்பவர்கள். இவர்கள் இம்மையிலும் மறுமையிலும் தோல்வியடைந்தவர்கள் என ஸூரதுல் அஸ்ர் குறிப்பிடுகிறது. மற்றய சாரார், வெற்றியடைந்தவர்கள். ஏனெனில், அவர்கள் நேரத்தை முதலீடு செய்தவர்கள் என ஸூரா குறிப்பிடுகிறது. மறுமை வெற்றிக்காக நேரத்தை இம்மையில் முதலீடு செய்தவர்களை இது குறிக்கிறது. எனவே, எமது வெற்றியும் நேரத்தை முதலீடு செய்வதிலேயே தங்கியுள்ளது.

தனது நாற்பதாவது வயதில் மரணித்த இமாம் நவவி அவர்கள் 500க்கும் அதிகமான நூல்களை எழுதியிருக்கிறார் என்றால் அவருடைய நேர முதலீடு ஒரு சாதனையாய் அமைந்திருக்கிறது.

இவை குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உயர்ந்த சாதனைகளுக்கான சில உதாரணங்கள் மட்டுமே. இவ்வாறான சாதனைகளுக்கு காரணம் அவர்கள் நேரத்தை ஒரு முதலீடாக நினைத்து பயன்படுத்தியமையாகும். எனவே, மாணவர்களாகிய நாமும் எமது மாணவப் பருவத்தை உயர்வாகக் கருதி நேரத்தினை திட்டமிட்டு செயற்படுத்துவோம்! நிச்சியம் வெற்றிகள் எம்மை வந்து சேரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்:
''என் மீது ஒருவர் ஒரு முறை ஸலவாத் கூறினால், அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் கூறுகின்றான்.'' (முஸ்லிம்)

மனித சமூகத்திற்கு வழிகாட்டியாக அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், தான் அல்லாஹ்விடமிருந்து கொண்டு வந்த தூதை பல இன்னல்களுக்கு மத்தியில் இம்மானிடருக்கு எத்தி வைத்தார்கள்.

தன் கட்டளையை சற்றேனும் குறையில்லாது நிறைவேற்றிய, பொறுப்புணர்வும் கடமையுணர்வும் கொண்ட தன் தூதர் மீது அல்லாஹ் அளவிலா அன்பை வைத்துள்ளான் என்பதையும், அடியார்களாகிய நாமும் அத்தகைய புனிதர் மீது அன்பு வைக்கின்றபோது ஏற்படும் நன்மைகள் பற்றியும் இந்த ஹதீஸின் வாயிலாக அறிய முடிகின்றது.

அல்லாஹ் தன் தூதர் மீது கொண்டுள்ள அன்பை, நபி மீது யார் ஸலவாத் சொல்கின்றாரோ அவருக்கு பத்து முறை ஸலவாத் சொல்வது கொண்டு வெளிப்படுத்துகின்றான். இவ்வுலகில் அல்லாஹ்வின் ஸலவாத்தை ஒருவன் பெற்றுக் கொள்வது பெரும் பாக்கியமே. அல்லாஹ் திருமறையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

''நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும் நபியின் மீது ஸலவாத்துச் சொல்கின்றார்கள். ஆகவே, முஃமின்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள்.'' (அல்அஹ்ஸாப்: 56)

இந்த வசனத்தின் மூலம் அல்லாஹ் மாத்திரமன்றி அவனது வானவர்களும் நபியவர்கள் மீது ஸலவாத்துச் சொல்கின்றார்கள் என்பதை அல்லாஹ் முஃமின்களுக்கு எடுத்துச் சொல்கின்றான். 'ஸலாத்' என்ற அரபுச் சொல்லின் பன்மை வடிவமே 'ஸலவாத்' என்பதாகும். இதற்கு 'பிரார்த்தனை' என்ற பொருள் கொடுக்கப்படுகின்றது.

அப்படியாயின், நாம் எமது உயிரிலும் மேலாக நேசிக்கின்ற நபியவர்கள் மீது ஸலவாத் சொல்வதானது, நபியவர்களுக்காக பிரார்த்தனை செய்கின்றோம் என்றே பொருளாகும். அப்பிரார்த்தனையின் மூலம் நபியவர்கள் மீதுள்ள அன்பை நாம் வெளிக்காட்டுகின்றோம். நபியவர்களை நினைக்காதவன், அவர் மீது ஸலவாத்துச் சொல்லாதவன் நிச்சயமாக அவர்கள் மீது அன்பு இல்லாதவனாகத்தான் இருக்க முடியும்.

மேலும், அல்லாஹ் ஸலவாத்துச் சொல்வதென்பது அவன் அடியான் மீது தனது அருள்களைப் பொழிவதாகும். இக்கருத்தையே ஹதீஸ் துறை அறிஞர்கள் விளக்கமாக முன்வைக்கின்றனர். அப்படியாயின், நாம் ஒரு தடவை நபியவர்கள் மீது ஸலவாத் சொன்னால் அல்லாஹ் எமக்காக பத்து தடவைகள் அருள் புரிகின்றான்.

அல்லாஹ்வின் தூதரவர்கள் மீது யார் ஸலவாத்துச் சொல்லவில்லையோ அவர் விடயத்தில் நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

''என்னைப் பற்றி பேசப்படும்போது, எவன் என் மீது ஸலவாத் சொல்லவில்லையோ அவன்தான் கஞ்சனாவான்.'' (திர்மிதி)

இந்த ஹதீஸும் நபியவர்கள் மீது ஸலவாத் சொல்ல வேண்டியதன் அவசியத்தையும் ஸலவாத் சொல்லாதவனின் தாழ்ந்த நிலையையும் அழகிய முறையில் உணர்த்துகின்றது. ஸலவாத்துக்களில் தொழுகையி இறுதி அத்தஹிய்யாதில் நாம் ஓதுகின்ற பின்வரும் ஸலவாத்தே சிறந்ததாகும்:

''அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக ஹமீதுன் மஜீத்.''

மேலும், நாட்களிலே சிறந்த நாளாகிய வெள்ளிக்கிழமைகளில் அதிகமாக நபியவர்கள் தன் மீது ஸலவாத்துச் சொல்லுமாறு பணித்துள்ளார்கள். ஏனெனில், அது அவர்களுக்கு எடுத்துக் காட்டப்படுகின்றது.

எனவே, வெள்ளிக்கிழமைகளில் அதிகமாக நபியவர்கள் மீது ஸலவாத் சொல்வதுடன் நபியவர்களின் பெயர் கூறப்படும்போதும், காலை-மாலை வேளைகளிலும் நபியவர்கள் மீது அதிகமதிகம் ஸலவாத் சொல்கின்ற பழக்கத்தை ஏற்படுத்தி, நபியவர்களது அன்பையும் அல்லாஹ்வினது அருளையும் பெற்றுக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

தொடர் 02

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

## காபிலின் காகம்

மனிதன் சுவனத்திலிருந்து பூமிக்கு இறங்கி வருவதற்கு முன்பு பூமி சுந்தரமான ஓர் இடமாக இருந்தது. இங்கே அமைதி குடிகொண்டிருந்தது. கடலில் கப்பல்கள் ஓடவில்லை. அதனால் அலை கடல் மலாயிகாமார்களைப் போலவே தூய்மை யாக இருந்தது. காற்றுக் கூட மனிதனின் முகத் தைத் தழுவாத காரணத்தால் மிகவும் பரிசுத்தமாக இருந்தது. பூமியில் பரந்திருந்த வயல்வெளி கள் எதிலும் மனிதக் கால்தடங்கள் படவில்லை. உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவின. ஒரு குற்றமும் அதன் எந்தப் பகுதியையும் களங்கப்படுத்தியிருக்கவில்லை. எல்லாவற்றிலும் சத்தியம் துடித்துக் கொண்டிருந்தது.

சூரியனின் சிதறி வீழ்ந்த வர்ணக் கிரணங் களுக்கு கீழே வெள்ளையாய்ப் படர்ந்த பனித் திவலைகளால் ஜொலித்துக் கிடந்தன மாம லைகள். பச்சை பசேலென பரந்து விரிந்து கிடந்த வெளியினில் காற்றின் முதுகின் மேல் ஏறி நறுமணங்கள் வாசம் வீசின. எல்லாம் பேரெழில். கண்ணைக் கவரும் காட்சிகள். ஆயினும், எதிலும் பூரணமற்ற ஏதோ ஒரு குறைபாடு! பூமியின் எழிலை அள்ளிப் பருக, அதனை அனுபவிக்க யாரும் இல்லாத குறைபாடு!

அப்போது ஒரு நாள் இந்த சூனியமான அலங் காரமும் அழகும் நிறைந்த பூமியை நோக்கி இறைவனிடம் இரு கரங்களையும் மேலே உயர்த்தி மிகவும் வினயமாகப் பிரார்த்தித்துக் கொண்டு ஒரு மனிதன் இறங்கி வந்தான். ஆம், பூமியில் முதல் மனிதன்! அப்போதுதான் இந்த வெறும் சுந்தர உலகம் அர்த்தமுள்ளதாக மாறியது.

அறிவு ஏற்பட்டு, தவறு செய்து, பின்னர் அதற் காக பாவமன்னிப்புக் கோரியபோது அனைத்தும் பேரர்த்தமுள்ளதாக மாறின. அறிவின் இயல்பு எப்போதும் இவ்வாறுதான் உள்ளது. ஆரம்பத்தில் பரிசுத்தத் தன்மை இழக்கப்படுகின்றது. அதைத் தொடர்ந்து அறிவு உதயமாகின்றது. தவறே இழைக்காத தூய்மையான ஆத்மாக்களே இறை வனின் மலாயிகாமார்கள். ஆயினும், சுவனத் தில் வைத்து மனிதனுக்கு அவனது பரிசுத்த தன்மை பறிபோனது. அதனை இழக்க வைத்தவன் இப்லீஸ் ஆவான். இந்த சம்பவத்தின் பின்னால் உன்னதமான ஒரு தத்துவம் இருக்கின்றது. உலகம் தோன்றுவதற்கு முன்பே முடிவு செய்யப்பட்ட தத்துவம்! பூமியை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வசிப்பிடமாகவும் விளைநிலமாகவும் மனிதன் பயன்படுத்த வேண்டும் என்ற தத்துவம். மனிதன் சுவனத்தில் நின்று தான் வருகின்றான் என்ற விடயத்தை காகங்களான நாங்கள் நன்கு அறிந் திருந்தோம்.

முதலில் கண்ணீர் மழை! ஆத மும் ஹவ்வாவும் பூமியில் வைத்து அழுத அழுகை இருக்கிறதே! அது பயங்கரமான துக்கமாக இருந்தது. கண்ணீர் கதறலின் சத்தம் அவர்களின் தவறின் பாரதூரத்தைப் பறைசாற்று வதாக இருந்தது. செய்த பாவத்தின் காரணத்தால் பச்சாதாபப்பட்டு அவர்கள் செய்த பாவமன்னிப்புக் கோரலின் பரிதாபக் காட்சியை நாங்கள் பார்த்தோம்.

எனது கணிப்பு சரியாக இருந்தால் பச்சா தாபத்திலேயே மூழ்கிப் போயிருந்தார் ஆதம்!

என்னவொரு தேஜஸான முகம். கம்பீரம் கொப்பளிக்கும் வசீகரமான வதனம். எல்லையற்ற பிள்ளை வாஞ்சை வீசும் கண்கள். ஒரு குழந்தையை அணைத்து மற்றையதைத் தள்ளி வைக்கும் இயல்புள்ளவரல்ல ஆதம். அதேவேளை, ஹவ்வா அவர் பூமியில் அனைத்து மனிதர்களினதும் தாயாக இருந்தார்.

''எங்கள் இறைவா, நாங்கள் எங்கள் ஆத் மாக்களுக்கு துரோகம் இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து பொறுத்து எம் மீது கருணை காட்டா விட்டால் நாங்கள் நஷ்ட வாளர்களில் ஆகிவிடுவோம்''

இந்தப் பிரார்த்தனையை இரவு பகலாக எந்த நேரமும் அவர்கள் இருவரும் செய்து கொண்டே இருந்தார்கள்.

❖ ❖ ❖ ❖

ஹவ்வா பிரசவித்தார். மனிதர்கள் பறவைகளான எங்களைப்போல முட்டையிடுவதில்லை. அவர்கள் குழந்தைகளைப் பிரசவிப்பார்கள். ஹவ்வாவுக்கு இரட்டைப் பிரசவம். ஒரு பிரசவத்தில் ஓர் ஆண் பிள்ளையும் ஒரு பெண்பிள்ளையும். இரண்டாவது பிரசவத்திலும் இவ்வாறே ஓர் ஆணும் பெண் ணும். முதலாவது பிரசவத்தில் பிறந்த ஆணுக் கும் இரண்டாவது பிரசவத்தில் பிறந்த பெண் ணொருவருக்குமே திருமணம் முடிக்க அனுமதி உண்டு. ஆதமிற்கு வழங்கப் பட்ட ஷரீஆ சட்டம் அப்படித் தான் இருந்தது!

ஹவ்வா ஆபிலையும் அவ னது சகோதரி இக்லீமாவையும் பெற்றெடுத்தார். இரண்டாம் பிரசவத்தின்போது காபிலும் அவனது சகோதரி லூமாவும் பிறந்தனர்.

சகோதர சகோதரிகள் சேர்ந்து வளர்ந்து பிள்ளைப் பராயத்தை அடைந்தனர்.

ஒரு நாள் எட்டே வயது நிரம்பிய ஆபில் மலையிலி ருந்து உல்லாசமாக சப்தமிட்ட வண்ணம் துள்ளிக் குதித்து இறங்கி வந்தான். பின் னால் காபிலும் சகோதரனுடன் சேருவதற்கு ஓடி வந்தான். அவனது கையில் ஒரு கம்பும் இருந்தது. வழமைபோல இருவரும் விளையாட்டில் ஈடு பட்டிருந்தனர். என்ன காரணமென்று எனக்குத் தெரியவில்லை. இரு சகோதரர்களில் ஆபில் மென்மையான புது மண்ணைப்போல மிருது வாகவும், காபில் பாறையைப்போல கடினமாகவும் இருப்பதாக எனக்குத் தோன்றியது.

விளையாட்டின்போது காபில் எப்போதும் வேட்டைக்காரன் பாத்திரத்தை எடுத்துக் கொள் வான். பாவம், ஆபிலுக்குக் கிடைப்பது இரையின் பாத்திரம்! ஆபிலைக் காபில் விரட்டிச் செல்வான். விளையாட்டு மும்முரமாகும்போது காபிலின் கண்கள் வெறுப்பை நெருப்பாய் கக்கும். கைக்கு கிட்டிய பொருளால் அவன் ஆபிலைத் தாக்குவான். ஆரம்பத்தில் ஆபில் சிரித்துக் கொண்டு காபிலின் தாக்குதலை எதிர்கொள்வான்.

அவனது சிரிப்பொலி குன்றுகளிலும் மரங் களிலும் பட்டுத் தெறிப்படையும். மகிழ்ச்சி பிரவாகித்து ஓடும்; ஒரு தெளிந்த நீரோடையைப் போல கலகலவெனச் சிரிப்பான் ஆபில். அந்த சிரிப்பொலியைக் கேட்கும்போது காபிலின் வெறி இன்னும் அதிகரிக்கும். ஒரு கையில் வைத்திருக்கும் கம்பை இரு கைகளினாலும் பிடித்துக் கொண்டு அவன் ஆபிலுக்கு அடிப்பான். அப்போது ஆபிலின் சிரித்த வதனம் துக்ககரமாக மாறும். சிரிப்பொலி அழுகைக் குரலாக பரிணமிக்கும்.


அப்போது ஆதம் அந்த இடத்தை நோக்கி ஓடி வருவார். அடிவாங்கிக் கொண்டிருக்கும் ஆபிலைக் கண்டு பதைபதைப்பார்.

**06 ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்



# எழுத்து

அப்பாஸியக் கலீபாவினுடைய செயலாளர் ஒருவர் எகிப்திய தேசாதிபதி ஒருவருக்கு நிருபம் ஒன்று எழுதிக் கொண்டிருந்தார். மௌனமாகவும் அமைதியாகவும் சிந்தனைக் கடலிலே மூழ்கி, முத்தைப் போன்ற உயர் வசனங்களை தண்ணீர் போன்று பாய்ந்து செல்லும் நடையிலே எழுதிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவருடைய பணிப்பெண் அவர் அமர்ந்திருந்த அறைக்குள் சடுதியாகப் புகுந்து, ''ஐயா, வீட்டிலே மாவு இல்லை'' என அறிவித்தாள். இந்த எதிர்பாராத இடைத் தடையினாலே தடுமாற்றமடைந்த செயலாளர், சிந்தனைத் தொடர் அறுபட ஞாபக மறதியாக, ''ஐயா, வீட்டிலே மாவு இல்லை'' என்ற வசனத்தையும் அந்த நிருபத்தில் எழுதி விட்டார்.

**எம்.ஏ. ரஹ்மான்**

நிருபம் எழுதி முடிக்கப்பட்டதும் அது கலீபாவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ''ஐயா, வீட்டிலே மாவு இல்லை'' என்ற வசனம் இடையிலே ஏன் புகுந்தது என்பது கலீபாவுக்கு விளங்கவில்லை. எனவே, அவர் தமது செயலாளரை அழைத்து விசாரித்தார். செயலாளர் தமது செயலுக்கு வெட்கப்பட்டாரெனினும், நடந்தவற்றை உண்மையின் பிரகாரம் கூறினார்.

கலீபா அந்த நிருபத்தை மீண்டும் ஒரு தடவை வாசித்துப் பார்த்த பின்னர், ''நிருபத்தின் முற்பகுதி சொற்சிறப்பிலும் வசனக் கட்டிலும் பிற்பகுதியைப் பார்க்கிலும் எவ்வளவோ சிறந்து விளங்குகின்றது. உம்மைப் போன்ற ஆற்றலுள்ள எழுத்தாளர், வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளினாலே துன்பப்படுதல் ஆகாது'' என்று கூறினார்.

அன்றாடத் தேவைகள் செயலாளரை வருத்தாத வகையிலே, கலீபா அவருக்குத் தாராள வசதிகள் செய்து கொடுத்தார்.

---

**05 ஆம் பக்கத் தொடர்...**

தந்தையைக் கண்ட பின்பும் நிறுத்தாது ஓங்கி அடித்துக் கொண்டிருப்பான் காபில்.

''காபில் உனது சகோதரனை நீ என்ன செய் கின்றாய்?'' தூரத்தில் வரும்போது ஆதம் சத்த மிடுவார். அப்போது காபில் மறுமொழி பகர்வது இங்ஙனமாகும். ''நாங்கள் விளையாடிக் கொண் டிருக்கின்றோம். ஆபிலின் பாகம் இரையாகும். இரையைப் பிடிக்க நான் தாக்குதல் தொடுக் கின்றேன்.'' ஓடிச் செல்லும் ஆதம் இருவரையும் பிரித்து விட்டு காபிலைக் கடிந்து கொள்வார்.

''நீங்கள் ஒரே மாதா-பிதாக்களின் பிள்ளை களாவீர்கள். ஒரே பூமியில் வசிக்க வேண்டிய சகோதரர்களாக இருக்கின்றீர்கள். உங்களை இணைக்க வேண்டியது அன்பாகும்.'' இருவருக்கும் உபதேசிப்பார். இதனைக் கேட்டு விட்டு எதுவும் பேசாமல் நிற்கும் காபிலை நியாயப்படுத்திக் கொண்டு ஆபில் தந்தையிடம் இருவரையும் மன்னிக்குமாறு மன்றாடுவான். இந்தக் காட்சிதான் என்னை மிகவும் கவலையில் ஆழ்த்தும்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றே செய் நல்லது நடக்கும்!

**சீனி முஹம்மட் சஜீர்**
**இஸ்லாஹிய்யா வளாகம்**

வேலைகளைப் பிறகு செய்யலாம் என்று தள்ளிப் போடுவது ஓர் இளைஞனின் எதிர்கால அடைவில் பாதிப்பு செலுத்துகின்ற அம்சமாகும். வேலைகளை தள்ளிப்போடுவதன் காரணமாக நமது வாழ்வின் இலட்சியக் கனவுகளை நிறைவேற்ற முடியாத நிலைமைகளே அதிகம் ஏற்பட்டுள்ளன.

தோல்விகளும் நிராசைகளும் இழப்புகளும் அவமானங்களும் வாழ்க்கையை சங்கிலித் தொடர்களாக சூழ்ந்து பின்னிப் பிணைந்து விடும் ஏக்கங்களும் எதிர்காலத்தில் எங்களது வெற்றிக்கு வித்து விடுகின்ற பரிசுகாளகவே நாங்கள் பார்க்க வேண்டும். மாறாக, இவ்வாறான நிலைமைகள் எங்களது வாழ்க்கைக்கான முற்றுப்புள்ளிகள் என்ற தவறான எண்ணங்களோடு வாழக் கூடாது.

எங்களில் அதிகமானவர்கள் தோல்வி என்பது வெற்றிக்கான உந்து சக்தி என்று வாயளவில் பேசுகின்றவர்களாகவே இருக்கின்றோமே தவிர, அந்தத் தோல்விகளை சாதனைகளாக மாற்றுகின்ற நகர்வில் நாங்கள் இன்னும் பூச்சியமாகவே இருக்கின்றோம்.தோல்விகளை தங்களது வாழ்நாளில் அதிகம் சந்தித்து சாதனை படைத்த மாமனிதர்களின் வரலாற்றைப் பற்றி கற்கின்றோம், பேசுகின்றோம், எழுதுகின்றோம். ஆனால், எங்களது உயர்வான எண்ணங்களும் இலட்சியங்களும் சிறிய தோல்வியுடன் முற்றுப் பெறுகின்றன. இவ்வாறு இருக்கும் போது எங்களால், எங்களது வாழ்வை எவ்வாறு இருளிலிருந்து வெளிச்சத்திற்கு நகர்த்த முடியும்?

உலகில் இரண்டு விடயங்கள் குறித்து எவருமே அறிய மாட்டார்கள். முதலாவதாக, தூங்குபவனை எழுப்பிக் கேட்டுப் பாருங்கள்; தூங்க ஆரம்பித்தது எப்போது என்பதை சரியாகச் செல்ல முடியாமல் திணறுவான். இரண்டாவது, சமூகங்களின் வீழ்ச்சி. சமூகங்களின் வீழ்ச்சி துவங்கியது எப்போது என்பதை அந்தச் சமூகங்களே உணர மாட்டாது. ஆனால், அந்த வீழ்ச்சியின் விளைவுகளை பிந்திய தலைமுறையினர்தான் அனுபவிப்பார்கள்.

இன்று நாம் பார்க்கும் சமுதாய வீழ்ச்சிக்கும் தேக்கத்திற்கும் இந்தச் சோம்பலும் அக்கறையின்மையும் இலட்சியத்தைக் குறித்துப் போதிய விழிப்புணர்வு இல்லாததும்தான் காரணங்களாகும். இதன் விளைவாக இன்று குடும்ப விவகாரங்களிலிருந்து தேச நிலைவரம் வரை எல்லாமே சிக்கலாகி நிற்கின்றன. நிமிடங்களில் செய்ய வேண்டிய பணிகள், வருடங்கள் பல ஆகியும் செய்யப்படாமல் தேங்கி நிற்கின்றன.

கொஞ்சம் கண்களைத் திறந்து பாருங்கள்! உங்களை நீங்களே ஆராயுங்கள். குடும்பத்தவர்களை, உறவினர்களை, நண்பர்களை ஆய்ந்து நோக்குங்கள். சக ஊழியர்களை, சமூகத்தினரை, நகராட்சியை, மாநிலத்தை, அரசாங்கத்தை, அரசியலை ஆராய்ந்து பாருங்கள். எல்லாரிடத்திலும், எல்லா நிலையிலும், எல்லா மட்டத்திலும் சோம்பலும் தள்ளிப்போடும் பழக்கமும் குடியிருப்பதை உணர்வீர்கள். இது ஒரு பாரிய நோயன்றி வேறென்ன? இது வீழ்ச்சிக்கான அடையாளம் இல்லாமல் வேறொன்றுமில்லை.

கடந்த காலத்தை சிறிது சிந்தித்துப் பார்த்தால் இன்றைய வேலையை நாளைக்குச் செய்யலாம், அடுத்த வாரம் செய்யலாம், விடுமுறையில் செய்யலாம், ஓய்வு கிடைக்கும்போது செய்யலாம் என்று தள்ளிப்போட்டு நமது மனோ இச்சைக்கு இடமளித்திருக்கிறோம். எங்களது இலக்குகளை அலட்சியமடையச் செய்யும் எதிரிகள் எம்மிடத்திலே உள்ளனர்.

எங்களது முயற்சிகளில் ஏற்பட்டுள்ள சிறிய கோளாறுகளாகும். அந்தக் கோளாறுகளை இனங்கண்டு அதனை வெற்றிக்கான சவால்களாகப் பார்த்து எங்களது வாழ்வில் உயர்ந்த சாதனைகளைப் படைப்பதற்கு நாங்கள் இன்றிலிருந்து முயல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லமான கினிப் பன்றிகள்

அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com

கினிப் பன்றி (Guinea pig) இந்தப் பெயரைக் கேட்டதும் பயந்துவிட வேண்டாம். பெயரில் பன்றி (pig) என்று வந்ததனால் இது பன்றி இனத்தைச் சேர்ந்ததோ அல்லது கினி (Guinea) என்று வந்ததனால் கினியா நாட்டைச் சேர்ந்ததோ அல்ல. 'பன்றிகள்' என இவை அழைக்கப்படுவதன் சரியான விளக்கம் என்ன என்பது தெளிவில்லாமலே இருக்கின்றது. அவை ஏதோவொரு வகையில் பன்றிகளின் தோற்றத்தில் இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். இது கொறித்து உண்ணும் கேவிடே குடும்ப வகையினுடையதும் மற்றும் கேவியா எனும் விலங்கு வகையைச் சார்ந்ததுமாகும். இவை அந்தீஸ் மலை நாட்டுக்கு உரித்தானவையாகும். ஆனால், தற்போது இவற்றை இயற்கையான காட்டுப் பகுதிகளில் காண முடியவில்லை. தற்போது இவை வீடுகளில் செல்லப் பிராணியாகவும் பண்ணைகளில் விற்பனைக்காகவும்தான் வளர்க்கப்படுகின்றன.

**உடற்தோற்றம்**

கொறித்துண்ணுபவற்றில் கினிப் பன்றிகள்தான் மிகவும் பெரியவை. உடற்தோற்றத்தில் அவற்றுக்கு பெரிய தலை, தடித்த கழுத்துகள், நீண்ட உடல், வட்டமான பின்பகுதி, குட்டையான எலி, அணில்களுடையது போன்ற நான்கு கால்கள், எந்தவித வால் அறிகுறியும் இல்லாத பின்பக்கம் என பார்ப்பதற்கு பன்றியின் தோற்றத்தில் துரு துருவென அழகாக இருக்கும். பன்றியின் தோற்றத்தில் இருந்ததனால் இது பன்றி இனத்தைச் சேர்ந்ததல்ல. இந்த கினிப் பன்றிகள் 700 முதல் 1200 கிராம் நிறையையும் 20 முதல் 25 செ.மீ. நீளம் வரையான வளர்ச்சியையும் கொண்டிருக்கும். சராசரியாக அவை நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன. சரியான பராமரிப்புகளுடன் வளர்த்தால் எட்டு ஆண்டுகள் கூட அவை உயிர் வாழும். 2006 ஆம் ஆண்டு கின்னஸ் உலக சாதனையில் மிக நீண்ட காலமாக உயிர் வாழ்ந்த கினிப் பன்றியின் வயது 14 ஆண்டுகளும் 10.5 மாதங்களும் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நிற அமைப்பு**

கினிப் பன்றிகளின் விசேட அம்சமே அவற்றின் உடல் உரோமங்களின் நிற அழகுதான். தனி வெள்ளை, கறுப்பு, மஞ்சள், பழுப்பு, செம்மஞ்சள் (ஒரேஞ்ச்), சாம்பர், கபிலம் எனத் தனித் தனி நிறங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட கலவை நிறங்களிலும் இவை காணப்படுகின்றன. அத்தோடு, சுருட்டை முடி (Curl haired), நீண்ட முடி (Long haired), குட்டை முடி (Short haired) எனவும் சிவப்புக் கண் (Red Eye) எனவும் இவை வேறு பிரித்து அறியப்படுகின்றன. இந்த முடி அலங்காரங்கள் எல்லாம் அவற்றுக்குத் தனி அழகைக் கொடுக்கின்றன.


**வாழ்க்கை முறை**

இவை கூட்டாக வாழும் இயல்புடையவை. இரண்டோ, இரண்டுக்கு மேற்பட்ட எண்ணிக்கையிலோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவற்றை எமது வீடுகளிலும் வளர்க்கலாம். ஒரு கூட்டத்தில் அதிகமான பெண் கினிப் பன்றிகளும் அவற்றின் குட்டிகளும் ஒரு வளர்ச்சியடைந்த, ஆதிக்கம் செலுத்தக் கூடிய, அனைத்தையும் கட்டுப்படுத்தி நிர்வகிக்கக் கூடிய ஓர் ஆண் கினிப் பன்றியும் இருக்கும். தண்ணீரையும் சிறு நீரையும் கொண்டு ஆண் கினி தனது கூட்டத்திற்கான எல்லையை வரைந்து கொள்ளும். வேறு ஆண் கினிகளை அதற்குள் பிரவேசிக்க அனுமதிக்காது. அதனால்தான் ஒரே கூட்டில் பல ஆண் கினிகளை வளர்க்க முடியாதுள்ளது. அவை தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக ஓர் ஆண் கினி மற்றோர் ஆண் கினியுடன் எப்போதும் சண்டையில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கும். எனவே, ஓர் ஆண் கினியுடன் ஐந்து முதல் எட்டு வரையான பெண் கினிகளைச் சேர்த்து விடலாம். தனியாக ஒரு கினியை மட்டும் வளர்க்கவும் கூடாது. அப்படியாயின், அது மிக விரைவில் சோர்ந்து பயந்து இறந்துவிட வாய்ப்புண்டு. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் இருக்க வேண்டும்.

கினிப் பன்றிகள் கூட்டமாகவே உணவுண்ணும். காடுகளில் வாழ்வதாக இருந்தாலும் இவற்றுக்கு வளை தோண்டும் பழக்கமோ, கூடு கட்டும் பழக்கமோ இல்லை. இதர விலங்குகள் தோண்டிய வளைகளில் அல்லது மர வெடிப்புகளில் அவை பாதுகாப்பாக இருந்தால் தஞ்சம் புகுந்து விடும். சூரிய ஒளியைத் தவிர்ப்பதையே அவை விரும்புகின்றன. இருளான இடங்களில் வசிப்பதற்கு மிகவும் ஆசைப்படும்.

**உணவு முறை**

புல்தான் கினிப் பன்றியின் இயற்கை உணவு. அவற்றின் பின் கடைவாய்ப் பற்கள் தாவரப் பொருட்களை அரைப்பதற்குப் பொருத்தமாகவும் முன் பற்கள் உணவைக் கொறிக்க இலகுவாகவும் இருக்கும். முன்பற்கள் அவற்றின் வாழ்நாள் முழுவதும் வளரும். அவற்றின் வாயைவிட நீண்டு விடும். அதனைத் தவிர்த்துக் கொள்வதற்காக கட்டைகளையும் கார்போர்ட்களையும் பிளாஸ்டிக், இறப்பர், துணி என அனைத்தையும் அடிக்கடி கொறித்துக் கொள்ளும். கினிப் பன்றிகள் காய்ந்த புற்களை உண்பதால் அவற்றுக்கு நல்ல போசாக்கு கிடைக்கின்றது. குறிப்பாக, இலுவைப் புல், குதிரைப் புல், வைக்கோல் வகைகளும் கீரை வகைகளும் அவற்றின் விருப்பமான உணவுகள். அவையல்லாது கரட், தக்காளி, அப்பிள், தோடம்பழம், பிஸ்கட், பாண் என அனைத்தையும் உண்டு விடும். வீட்டில் வளர்ப்பதாக இருந்தால் வீட்டுக்குக் கொண்டு வரும் காய்கறிக் கழிவுகளை குப்பையில் எறிந்து விடாமல் அவற்றுக்குக் கொடுத்தாலே போதும், தின்று தீர்த்து விடும்.

**தொடர்பாடல் முறை**

சிறந்த தொடர்பாடற் திறன் கினிப் பன்றிகளுக்கு உண்டு. துல்லியமான கேட்டல் சக்தி, மோப்ப சக்தி, தொடுகை உணர்ச்சி என்பன அவற்றின் தொடர்பாடல் சாதனங்களாக விளங்குகின்றன. தமது இன உறுப்பினர்களுக்கிடையே தகவல் தொடர்புக்கான முதன்மை வழிமுறையாக இருப்பது குரலொலி ஓசைகள்தான். வித விதமான ஓசைகளை வெளிப்படுத்தி தமது உணர்ச்சிகளை வெளிக்காட்டும். அவை வெளிப்படுத்தும் சில ஓசைகள் பன்றிகள் எழுப்பும் ஓசையுடன் மிகவும் ஒத்திருக்கிறது. உதாரணமாக; தனது வளர்ப்பாளரை, உடைமையாளரைக் கண்டால் அல்லது உணவு கொடுக்கப் போவதை அறிந்து கொண்டால் அதற்கு பதிலுரைக்கும் விதமாக 'வீக் வீக்' என்று உரக்கக் கத்தும். அதன் முதுகில் தடவிக் கொடுக்கும்போதும் ஒரு கினி இன்னொரு கினியை முகர்க்கும்போதும் மெலிதாக 'குர் குர்' என்று ஒலியெழுப்பும். இது அன்பைக் காட்டும்.

அவை பயந்தாலோ, கோபத்திலிருந்தாலோ உடல் அதிர்ந்தவாறு பூனை போன்று சீறும். இதற்கு 'உருட்டொலி' என்றும் சொல்லப்படுகிறது. அதேபோன்று, பெண் கினியைக் கவர்வதற்காக 'ரம்பிள்ஸ்ட்ரட்டிங்' எனும் நடனத்துடன் பெண் கினியைக் கவர ஒருவித சிணுங்கும் ஒலியையும் ஒலிக்கச் செய்யும். அபாயம் நேரிடும்போது அதனை எச்சரிக்க வீரிட்டு கீச்சொலியை எழுப்பும். இவ்வகை ஒலிகள் அவற்றின் பிரதான தொடர்பாடல் சப்தங்களாகும். அதேபோன்று, அவை மிக அரிதாக முக பாவனைகள் கூட செய்யும். நாம் சிரிப்பதைப் போன்று அவையும் அன்புணர்ச்சியுடன் சிரிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப் பெருக்க முறை

கினிப் பன்றியால் ஆண்டு முழுவதும் இனப் பெருக்கம் செய்ய முடியும். இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் ஆண்டுக்கு ஐந்து குட்டிகள் வரை ஈன்றெடுக்கும். கருவுற்றிருக்கும் பெண் கினி அளவில் பெரிதாக, பருத்த கத்தரிக்காய் வடிவில் இருக்கும். பெரும்பாலான இதர கொறித்துண்ணிகளின் குட்டிகள் பிறக்கும்போது கண் திறக்காமல் உடலில் உரோமங்கள் வளராமல் உணவுக்குப் பெற்றோரைச் சார்ந்திருக்கும் நிலையில்தான் பிறக்கும். ஆனால், கினிப் பன்றிகள் இதில் வித்தியாசமானவை. புதிதாய்ப் பிறக்கும் கினிக் குட்டிகள் உரோமங்கள், பற்கள், நகங்கள் என்பன நன்கு வளர்ந்த நிலையிலும் கண்கள் பாதி திறந்த நிலையிலும்தான் பிறக்கின்றன. இது முற்றிலும் அற்புதமானவொன்று. எனவே, பிறந்து சில வினாடிகளிலேயே அவை உடனடியாக நகரத் தொடங்கி விடுகின்றன.

## அறிவியல் ஆய்வுக்காகப் பயன்படுத்தல்

17 ஆம் நூற்றாண்டு முதலே கினிப் பன்றிகள் மீது உயிரியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1960 ஆம் ஆண்டுகளில் மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் ஆண்டுதோறும் சுமார் 2.5 மில்லியன் கினிப் பன்றிகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. 19 மற்றும் 20 ஆம் நூற் றாண்டுகளில் இந்த விலங்குகள் அடிக்கடி மாதிரி உயிரினங்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பொதுவாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் ஒரு பொருள் ஆங்கிலத்தில் 'கினியா பிக்' (கினிப் பன்றி) என அழைக்கப்படுகின்றது. இதுவும் கினிப் பன்றி என்ற பெயர் வரக் காரணமாக உள்ளது. நோய்களுக்கான மருந்து கண்டுபிடிப்புகளின் போது அவற்றை செயற்படுத்திப் பார்ப்பதற்காக கினிப் பன்றிகள் கூடுதல் அளவில் பயன்படுத் தப்பட்டுள்ளன. இது 2007ஆம் ஆண்டின் பின் கினிகளைப் பயன்படுத்தும் வீதம் நன்கு குறைந் துள்ளது. தற்போதைய ஒட்டுமொத்த ஆராய்ச்சி கூட விலங்குகளில் அவை சுமார் 2 ஆக இருக்கின்றன. மட்டுமன்றி, விண்வெளி ஆராய்ச்சிகளுக்காகவும் விண்வெளிப் பயணங்களிலும் கினிப் பன்றிகள் பல முறை அனுப்பப்பட்டிருக்கின்றன.


## செல்லப் பிராணி

நாய், பூனை, முயல் போன்று இன்று கினிப் பன்றிகளும் வீடுகளில் செல்லப் பிராணியாக வளர்க்கப்படுகின்றன. எனவே, வனாந்தரங்களில் காண்பதை விடவும் வீடுகளிலும் பண்ணை களிலும்தான் இவற்றை அதிகமாகக் காணலாம். குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா போன்ற நாடுகளில் மனிதர்கள் தமது வீட்டு செல்லப் பிராணியாக வளர்க்கின்றனர். தென் அமெரிக்காவின் பழங்குடி மக்கள் இதனை கலாசார சம்பிரதாய சடங்குகளுக்காகவும் உணவுக்காக வும் மருத்துவ நடவடிக்கைகளுக்காகவும் பயன் படுத்தியுள்ளனர்.

## வீட்டில் வளர்க்கும் முறை

கினிகள் அளவில் சிறியவை என்பதால் சிறிய தோர் இடத்தில் அவற்றை வளர்க்க முடியும். **3 x 3** அடி பரப்பளவுள்ள ஒரு கூண்டுக்குள் அவற்றை வளர்க்கலாம். மிக விரைவாக அவற் றால் நகரவோ, சாதாரண உயரத்தைக் கூட தாண்டவோ முடியாததால் வீட்டில் வளர்ப்பது மிக சுலபம். அவற்றின் கூண்டுக்குள் பல வர்ண வேலைப்பாடுகள், பந்துகள், ஏறி இறங்குவதற்கு படிக்கட்டுகள், கடந்து செல்வதற்கு பாலங்கள், மறைந்து கொள்வதற்கு குகைகள், படுத்து உறங்குவதற்கு மெத்தைகள் என அழகுபடுத்தி வைக்கலாம். நீர் அருந்தவும் உணவுண்ணவும் கூண்டுக்குள்ளேயே ஓர் இடத்தை ஒதுக்கிக் கொடுக்கலாம். தரையில் மரத் தூள்போட்டு வைப்பதால் அவற்றின் சிறுநீரும் விட்டைகளும் துர்நாற்றத்தை ஏற்படுத்தாது. வாரத்திற்கு ஒரு முறை சுத்தம் செய்தாலே போதும். ஆரம்பத்திலிருந்தே சரியாக உணவு வழங்கி அன்பாகக் கையாண்டால் மிக விரைவில் அவை எம்முடன் பழகி விடும். நாம் அருகில் செல்லும்போது எம்மை அடை யாளம் கண்டு கொண்டு சமிக்ஞை செய்யவும் ஒலியெழுப்பவும் கையில் ஏறவும் பழகிக் கொள்ளும்.

பன்றி இறைச்சி உண்பதையும் அதனை விற் பதையும் வளர்ப்பதையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. அப்படியாயின் கினிப் பன்றியை வளர்க்கலாமா? என்ற கேள்வி உங்களுக்குள் எழுந் திருக்கும். தாராளமாக வளர்க்கலாம். இஸ்லாம் இதனைத் தடைசெய்யவில்லை. பன்றி என்ற பெயர் இருந்ததற்கு இது பன்றி இனமல்ல. எலி மற்றும் முயல் குடும்பத்தைச் சேர்ந்ததவைதான் இந்த கினிகள். அல்லாஹ்வின் மற்றுமோர் அருமையான படைப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தோல்வி என்றால் என்ன?

- ❖ தோற்றவர் என்று பொருளில்லை. மாறாக, நாம் இன்னும் வெற்றி பெறவில்லை என்று பொருள்.
- ❖ நாம் எதையும் சாதிக்கவில்லையென்று பொருளில்லை. மாறாக, சில பாடங்களை கற்றுக் கொண்டிருக்கிறோம் என்று பொருள்.
- ❖ நாம் அவமானப்பட்டதாக பொருளில்லை. மாறாக, முயன்று பார்க்க துணிவு எம்மிடம் உள்ளது என்று பொருள்.



- ❖ வாழ்க்கை வீணாகி விட்டதாக பொருளில்லை. மீண்டும் ஆரம்பிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று பொருள்.
- ❖ விட்டுவிட வேண்டும் என்று பொருளில்லை. இன்னும் செம்மையாக உழைக்க வேண்டுமென்று பொருள்.
- ❖ எம்மால் அடைய முடியாது என்று பொருளில்லை. அடைய கொஞ்சம் காலம் தாமதமாகலாம் என்று பொருள்.
- ❖ இறைவன் எம்மைக் கைவிட்டு விட்டான் என்று பொருளில்லை. எமக்கு வேறு நல்ல தோர் எதிர்காலத்தை நிர்ணயம் செய்து வைத்துள்ளான் என்று பொருள்.

**ஏ.எம்.எப். மப்ரா**
**அல்முஃமினாத் பெ.அ.க.**
**அக்குரணை**



## கண்ணீரின் மகிமை

உலகிலேயே மிகவும் அற்புதமான, இயற்கையான கிருமிநாசினி கண்ணீர்தான். இயற்கை அந்தளவிற்கு இதனை உருவாக்கியுள்ளது. ஒரு கரண்டி கண்ணீரானது நூறு கலன் தண்ணீரிலுள்ள கிருமிகளை சுத்தப்படுத்த வல்லது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். கண்ணீரிலுள்ள இரசாயனப் பொருளான லைசோசோம் கண்களைக் காக்கும். இது கிருமிகளுடன் போராடி கண்ணை நலமாக வைத்திருக்கின்றது. கண்களை மட்டுமல்லாமல், தேவைப்பட்டால் குருதியிலுள்ள விஷக் கிருமிகளையும் அழிக்கின்றது. எந்த மனிதன் தனது துன்பத்தைக் கண்ணீரின் மூலமாக வெளிப்படுத்தவில்லையோ அவனுக்கு மன அழுத்தம் அதிகமாகி இதயநோய் ஏற்படுகின்றது. பாவமன்னிப்புக் கோரி அழும்போதும் துன்பத்தின் காரணமாக அழும்போதும் இதயம் சாந்தமடைவது இந்த ஆய்வின் அடிப்படையில் வெளிப்பட்ட உண்மை. அத்துடன், கண்ணிலுள்ள நுண்கிருமிகளை அழித்து கண்ணை ஈரலிப்புடன் பளபளப்பாக வைத்திருக்கவும் கண்ணில் விழும் தூசுகளை அகற்றவும் கண்ணீர் உதவுகிறது.

**யாகூப் ரிஜ்வானா**
**நிக/நம்முவாவ மு.ம.வி.**
**நம்முவாவ**

## ‘இல்லை’ என்று சொல்லி விடு

- பணக்காரன் அறிவுரை கேட்டால், ‘‘இல்லை’’ என்று சொல்லி விடு; அவன் அவமதிப்பதற்காகக் கேட்பான்.
- சோம்பேறிகள் கையேந்தினால், ‘‘இல்லை’’ என்று சொல்லி விடு; ஏனெனில், அவன் தொடர்ந்து சோம்பேறியாகவே இருப்பான்.
- ஏழை இலவச உதவி கேட்டால், ‘‘இல்லை’’ என்று சொல்லி விடு; அவனுக்கு தொடர்ந்து உதவி கிடைத்தால் பிச்சைக்காரன் ஆகி விடுவான்.
- பெரியவர்களை அவமதிப்பவன் உதவி கேட்டால், ‘‘இல்லை’’ என்று சொல்லி விடு; காரணம் இக்கல்வி அவனை மேலும் மேலும் அகங்காரமாக்கும்.

**பர்ஹானா நவ்பர்**
**சுமையா பெண்கள் அ.க.**
**கிண்ணியா - 04**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாடுகளும் அதன் சிறப்புப் பெயர்களும்

- சூரியன் உதிக்கும் நாடு - ஜப்பான்
- ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் - சுவிட்ஸர்லாந்து
- புனிதபூமி - பலஸ்தீன்
- ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு - பின்லாந்து
- அதிகாலை அமைதி நாடு - கொரியா
- தெற்கின் பிரிட்டன் - நியூசிலாந்து
- நகரத்தின் தாய் - பாரிஸ்
- ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி
- காகித வீடு - ஜப்பான்
- உலகத்தின் கூரை - திபெத்
- நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு - நோர்வே
- ஐரோப்பாவின் போர்க்களம் - பெல்ஜியம்
- நைலின் கொடை - எகிப்து
- வெள்ளை யானைகளின் நாடு - தாய்லாந்து
- கங்காருகளின் நாடு - அவுஸ்திரேலியா
- பொற்கோயிலின் நாடு - மியன்மார்
- பொன் வாயிலின் நகரம் - சன்பிரன்சிஸ்கோ
- இந்து சமுத்திரத்தின் முத்து - இலங்கை
- சர்க்கரை கிண்ணம் - கியூபா
- சூரியன் அஸ்தமிக்காத நாடு - பிரிட்டன்
- முதியவர்களின் பிறப்பிடம் - ஜப்பான்

✍ **இன்ஹா இப்றாஹிம் ஸஹீப்**
**ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா**
**மாவனல்லை**

# கணிதமும் வாழ்க்கையும்

வாழ்க்கை என்பது கணிதம் போன்றது. அதில் சிக்கல்களும் தீர்வுகளும் நிரம்பியுள்ளன.

1. நல்லவற்றைக் கூட்டிக் கொள் +
2. தீயவற்றைக் கழித்துக் கொள் —
3. அறிவைப் பெருக்கிக் கொள் ×
4. நேரத்தை வகுத்துக் கொள் ÷
5. இன்ப-துன்பங்களை சமனாகக் கருது =
6. வளர்பிறை போல் முன்னேறு +++
7. செலவைக் குறைத்து வரவைப் பெருக்கு <
8. அன்பைப் பெருக்கு ஆணவத்தைக் குறை >
9. நல்லவர்களுக்கு இணையாக இரு II
10. பிறரை நம்பி வாழும் வாழ்வு நிலையற்றது #

✍ **இம்ரான் ஸகி**
**நம்முவாவ**



# அறிஞர்களின்
## பிரபல்யமான கூற்றுக்கள் சில...

❖ நமது பிறப்பு என்பது ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால், இறப்பு என்பது சரித்திரமாக இருக்க வேண்டும். (அப்துல் கலாம்)

❖ உன் மீது உனக்கே நம்பிக்கை இல்லை என்றால் கடவுள் நேரில் வந்தாலும் பயனில்லை. (விவேகானந்தர்)

❖ நீ நடந்து போக பாதையில்லையே என்று கவலைப்படாதே; நீ நடந்தால் அதுவே ஒரு பாதை.

❖ தன்னை உயர்ந்தவனாகவும் மற்றோரைத் தாழ்ந்தோராகவும் நினைப்பவன் ஒரு மன நோயாளி. (அம்பேத்கர்)

❖ முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வையுங்கள். அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரியே. (வின்சன்ட் பெல்)

❖ ஆமையும் வெற்றியடையும் முயலும் வெற்றியடையும். ஆனால், 'முயலாமை' வெற்றியடையாது.

❖ முயற்சி என்பது விதையைப் போல. அதை விதைத்துக் கொண்டே இருங்கள். முளைத்தால் மரம்; இல்லையெனில் அது மண்ணிற்கு உரம்.

✍ **புஹாரி முஹம்மட் அஸ்லம்**
**சிறாஜிய்யா அ.க.**
**ஓட்டமாவடி - 02**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. சூரத்துல் பக்கராவிலுள்ள ஆயத்துக்கள் எத்தனை?
2. முனாபிக்குகளின் முக்கிய அடையாளங்கள் மூன்றும் எவை?
3. இஸ்லாமிய வரலாற்றிலே முஸைலமா, தலீஹா, அஸ்வதுல் அன்ஸி, ஸஜா போன்றோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
4. ஈஸா நபியவர்களின் 12 சீடர்களும் எப்பதத்தால் அழைக்கப்பட்டனர்?
5. புனித அல்குர்ஆனின் எந்த நபியவர்களின் வரலாறு பற்றி அதிகளவில் கூறப்பட்டுள்ளது?
6. மனிதன் மரணித்து விட்டால் 3 அமல்களைத் தவிர ஏனைய அனைத்தும் துண்டிக்கப்பட்டு விடும் என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நவின்றுள்ளார்கள். இந்த 3 அமல்களும் எவை?
7. 'கல்புல் குர்ஆன்' என்று அழைக்கப்படும் சூரா எது?
8. அதான் சொல்லும் முறையை கனவின் மூலம் கற்றுக் கொண்ட ஸஹாபியின் பெயர் என்ன?
9. ஹஸரத் அலி (ரழியல்லாஹு அன்ஹு), முஆவியா (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோருக்கிடையில் நடைபெற்ற யுத்தத்தின் பெயர் என்ன?
10. சூரா யாஸீன் எத்தனை வசனங்களைக் கொண்டது?
11. ஹஸரத் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இறையடி சேர்ந்தது ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டிலாகும்?
12. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இறையடி சேர்ந்தது ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டிலாகும்?
13. ஹஸரத் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சி எப்போது ஆரம்பமானது?
14. இஸ்லாத்தில் முதன் முதல் ஜும்ஆத் தொழுகை நடத்தப்பட்ட பள்ளிவாசல் எது?
15. இமாம் ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கர்பலாவில் ஷஹீதான தினம் ஆஷுரா தினம் என அழைக்கப்படுகிறது. அன்னார் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டில் பிறந்தார்கள்?
16. ரமழான் மாதத்திற்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று 'ஷஹ்ருன் அழீம்' என்பதாகும். இதன் கருத்து யாது?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. அலிகார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றியவர் 1957 தொடக்கம் 1962 வரை பீஹார் மாநிலத்தின் கவர்நராகவும் பின்னர் இந்தியாவின் ஜனாதிபதியாகவும் இருந்தவர். 1963 இல் 'பாரத ரத்னா' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். அவரின் பெயர் என்ன?
2. பொருளாதாரத் துறையில் NIC என்றழைக்கப்படுவது எதனைக் குறிக்கிறது?
3. ஏகாதிபத்தியம், காலனித்துவம், குடியேற்றம் என்பனவற்றை எதிர்த்து நாடுகளின் இறைமையை மதிப்பதற்காக 1961 ஸ்தாபிக்கப்பட்ட அணிசேரா இயக்கத்தின் 5 ஆவது மாநாடுதான் இலங்கையில் நடைபெற்ற முதலாவது அணிசேரா இயக்கத்தின் மாநாடாகும். இது எத்தனையாம் ஆண்டில் நடைபெற்றது?
4. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
5. சுயாதீன தொலைக்காட்சி சேவை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்



# قِصَّةُ العُصْفُوْرِ الصَّغِيْرِ

சிறிய சிட்டுக் குருவியின் கதை

ذَاتَ يَوْمٍ طَارَ عُصْفُوْرٌ صَغِيْرٌ، وَدَخَلَ المَنْزِلَ مِنَ الشُّبَّاكِ، وَكَانَ بَاسِمٌ جَالِسًا عَلَى السَّرِيْرِ فَرَأَى بَاسِمٌ هَذَا العُصْفُوْرَ الصَّغِيْرَ دَاخِلَ الحُجْرَةِ، فَأَغْلَقَ عَلَيْهِ أَبْوَابَ البَيْتِ وَنَوَافِذَهُ وَأَمْسَكَ بِهِ مِنْ جَنَاحِهِ، وَأَخَذَ يَنْظُرُ إِلَيْهِ، وَإِلَى مِنْقَارِهِ وَرِيْشِهِ وَرِجْلَيْهِ، ثُمَّ وَضَعَهُ فِيْ القَفَصِ، وَقَدَّمَ لَهُ الطَّعَامَ وَالشَّرَابَ، فَلَمْ يَأْكُلْ وَلَمْ يَشْرَبْ، وَنَظَرَ العُصْفُوْرُ إِلَى بَاسِمٍ وَكَأَنَّهُ يَقُوْلُ لَهُ : أُرِيْدُ أَنْ أَعُوْدَ إِلَى أَبِيْ وَأُمِّيْ وَإِخْوَتِيْ وَأَطِيْرَ فِيْ الفَضَاءِ، وَفَوْقَ الأَغْصَانِ، وَأَصْعَدَ إِلَى السَّمَاءِ وَأَنْزِلَ إِلَى الأَرْضِ. فَأَشْفَقَ بَاسِمٌ عَلَى هَذَا العُصْفُوْرِ الصَّغِيْرِ وَأَطْلَقَهُ مِنَ القَفَصِ، وَفَتَحَ لَهُ الأَبْوَابَ وَالشَّبَابِيْكَ، فَطَارَ وَهُوَ فَرْحَانُ وَمَسْرُوْرٌ.

ஒருநாள் சிறியதொரு சிட்டுக் குருவி யன்னலினூடாக வீட்டுக்குள் நுழைந்தது. அப்போது பாஸிம் கட்டிலில் அமர்ந்திருந்தான். இந்த சிறிய சிட்டுக் குருவி அறையினுள் இருப்பதைக் கண்டு கதவு யன்னல்களை எல்லாம் மூடி விட்டான். அவன் சிறிய அச்சிட்டுக் குருவியைப் பிடித்து அதன் அலகு, இறகு, இரு கால்களை எல்லாம் நோட்டமிட்டுப் பார்க்க ஆரம்பித்தான். பின்னர், அச்சிட்டுக் குருவியை கூட்டில் அடைத்து உண்ணவும் குடிக்கவும் கொடுத்தான். ஆனால், அது உண்ணவோ, குடிக்கவோ மறுத்தது.

“நான் எனது தாய், தந்தையிடமும் எனது சகோதரர்களிடமும் திரும்பிச் செல்ல வேண்டும். வெளியிலும் மரக் கிளைகளுக்கு மேலாலும் பறந்து செல்ல வேண்டும். பூமிக்கு இறங்கி வரவும் வானளாவ உயர்ந்து செல்லவும் விரும்புகிறேன்...” என்று சொல்வது போல் அந்த சிறிய சிட்டுக் குருவி பாஸிமை உற்று நோக்கிக் கொண்டிருந்தது. பாஸிம் அதன் மீது அன்பு கொண்டு கதவு யன்னல்களைத் திறந்து அதனை கூட்டிலிருந்து விடுதலை செய்தான். அச்சிட்டுக் குருவி மகிழ்ச்சியுடன் பறந்து சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்குக.

| الأَسْئِلَةُ | الأَجْوِبَةُ |
|---|---|
| ١ مِنْ أَيْنَ دَخَلَ العُصْفُوْرُ المَنْزِلَ؟ | ١ كَانَ العُصْفُوْرُ مَسْرُوْرًا وَهُوَ يَطِيْرُ فِيْ الفَضَاءِ |
| ٢ أَيْنَ كَانَ بَاسِمٌ حِيْنَمَا دَخَلَ العُصْفُوْرُ ؟ | ٢ كَانَ العُصْفُوْرُ حَزِيْنًا وَهُوَ فِيْ القَفَصِ |
| ٣ مَاذَا فَعَلَ بَاسِمٌ؟ | ٣ نَعَمْ، أَطْلَقَ بَاسِمٌ العُصْفُوْرَ |
| ٤ أَيْنَ وَضَعَ بَاسِمٌ العُصْفُوْرَ؟ | ٤ قَالَ لَهُ: أُرِيْدُ أَنْ أَعُوْدَ إِلَى أَبِي وَأُمِّيْ وَأَطِيْرُ فِيْ الفَضَاءِ |
| ٥ مَاذَا قَدَّمَ لَهُ؟ | ٥ .لَمْ يَأْكُلْ العُصْفُوْرُ وَلَمْ يَشْرَبْ شَيْئًا |
| ٦ هَلْ أَكَلَ العُصْفُوْرُ أَمْ شَرِبَ شَيْئًا؟ | ٦ قَدَّمَ لَهُ الطَّعَامَ وَالشَّرَابَ |
| ٧ مَاذَا قَالَ العُصْفُوْرُ بِلِسَانِ حَالِهِ؟ | ٧ وَضَعَهُ فِيْ القَفَصِ |
| ٨ هَلْ أَطْلَقَ بَاسِمٌ العُصْفُوْرَ؟ | ٨ أَغْلَقَ عَلَيْهِ الأَبْوَابَ والنَّوَافِذَ وَأَمْسَكَ بِهِ |
| ٩ كَيْفَ كَانَ حَالُهُ وَهُوَ يَطِيْرُ فِيْ الفَضَاءِ؟ | ٩ حِيْنَمَا دَخَلَ العُصْفُوْرُ كَانَ بَاسِمٌ عَلَى السَّرِيْرِ. |
| ١٠ هَلْ كَانَ العُصْفُوْرُ حَزِيْنًا وَهُوَ فِيْ القَفَصِ | ١٠ دَخَلَ العُصْفُوْرُ المَنْزِلَ مِنَ الشُّبَّاكِ. |

الشُّبَّاكُ ج الشَّبَابِيْكُ
النَّافِذَةُ ج النَّوَافِذُ
யன்னல்

القَفَصُ — கூடு (Cage)

أَغْلَقَ — மூடினான்

الغُصْنُ ج الأَغْصَانُ — மரக் கிளைகள்

المِنْقَارُ — அலகு

الرِّيْشُ — இறகு


الجَنَاحُ — இறக்கை

تَأْوِيْ الطُّيُوْرُ إِلَى أَوْكَارِهَا فِيْ المَسَاءِ — பறவைகள் மாலையில் கூடுகளுக்குச் செல்லும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்




Miss. Aysha Hassan

## Assalamu alaikum dear friends,

Once again we are into the month of holy days. April, the month which brings a sense of relaxation and calmness for all the professionals and hardworking students like you, has arrived! So what are you waiting for? Just run to the Greens, flap your wings and inhale freedom!

Dear friends, didn't you notice that it wasn't even a few months since we came across the subject of "holidays" and once again we are here, discussing the same topic? Yeah! That is because of the quick or rapid passing of time. Time, which is the most valuable aspect on the face of this world, is running, quite fast.

Hence, dear friends, the issue for this month would be focusing on the concept of time. I know, perhaps you may consider this to be a hackneyed or a boring topic, for the value of time has been taught to you since your childhood. But, still, there seems to be quite a lot among us, who are heedless on the concept of time and hence simply waste it.

Just keep one thing clear in your minds, that the ones who used the time in the apt manner were the ones whom we consider to be great scholars, scientists, thinkers, philosophers etc...today. These people were provided with the same amount of time as for us and that is twenty four hours a day. They weren't granted with extra time. If this time was much sufficient for them, then how come we complain that the time insufficient for us?

A great speaker once said in one of his speeches that

- ✓ The value of a day would be known only to a person who lost his job as he was one day late in submitting his resume.
- ✓ The value of an hour would be known by someone who missed his bus because of his one hour delay
- ✓ The value of a minute would be known to a person who lost his life or got injured by knocking into a vehicle within a minute's time
- ✓ The value of a second would be known to people like Hussein Bolt who broke the world record just by a chance of a second.

Don't these words make much sense my dear friends? Time is a blessing (Ni'ma) bestowed upon the human beings by Allah (sbwt)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and thus it is a duty on us to use it with much care and get the maximum out of it. A day, an hour, a minute or a second that we wasted, would never ever come back to us. And we would have to answer the Almighty Allah, on the Day of Judgment for being heedless regarding the concept of time.

Therefore my dear friends, next time when you sit idling, doing nothing useful and waste your time, please do ponder on the matters discussed above. Inshaa Allah, I'm sure that this would raise your spirits.


## Hadith of the month

The Prophet (sal) said: "Take advantage of five matters before five other matters: your youth before you become old; your health, before you fall sick; your wealth, before you become poor; your free time before you become preoccupied, and your life, before your death." (Narrated by Ibn Abbas in the Mustadrak of Hakim & Musnad Imam Ahmad. Sahih)

## Laugh a while:

**Son:** "Dad, give me your car. I am old enough to drive it"

**Dad:** "Sorry my son! My car isn't old enough to be given to you!"



Your Corner



## A DRAUGHT has come

The tress bushes and vines have withered. The few leaves left on tress have lost their green colour. Cattles, goats and other animals are roaming about looking for something to eat and drink. Their skins have sunken into their bones. Due to lack of water, people are unable to bathe. The air is not fresh anymore. Due to environmental pollution, fresh and new vegetables have depleted. The prices of things have gone high. Life has turned out to be full of problems. To avoid draught, let us plant and grow trees.

***Hasna Nazar***
***Jamia Ayesha Siddeeqa***
***1st Year***

## Smoking

Smoking should be banned in public places. The end of a cigarette contain more harmful chemicals and thus the second hand smokers inhale much harmful smoke than the smoke inhaled by the smokers. Each time a person pulls on a carbon monoxide and Tar, when he exhales, the air, even non smokers are forced to inhale these poisons. Everybody knows that smoking is the main cause of lung cancer which kills thousands of people every year. Smoking causes many other diseases too.



***Name :M.R.Ilham Mohammed.***
***Grade :10***
***Walpaluwa m.m.v***
***Galgamuwa.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Uses of Trees

Trees are very useful. Both men and women get many kinds of food from them. They give us fuel for cooing and warmth for living and they also provide us with valuable medicines. The timber we obtain from the tress is used for furniture making and building houses and boats.

Moreover, trees stop soil erosion. Their roots hold the soil tightly so that the wind cannot blow it away. So, it is our duty to take care of the trees and grow forests. Sometimes, we may need to cut down trees, but we make sure plant some others plants in their place. It takes only an hour or two to cut down a big tree but it takes many years for it to grow.

***F.M.Mohamed Ilman***
***Grade – 11***
***Walpaluwa.M.M.V, Galgamuwa***



# My loving Sister

My loving sister is Fasna. She is a six month baby. She is cute and beautiful. She smiles with me every time. In my leisure time, I play with her. Thanks for Allah for giving me such a cute sister. I love her so much.

***Fasra Badurdeen***
***Grade 03***
***NK/Abukkagama M.M.V***

# T.B. Jayah

T.B. Jayah was born in Galagedara on 1 January 1890, as the son of Nona and Cassim Jayah. Jayah family belonged to Malay ethnic minority group in Sri Lanka. T.B. Jayah was a Sri Lankan educationalist, politician, diplomat and Muslim community leader. He started his career as a school teacher and retired after serving 27 years as the principal of Zahira College, Colombo. Under his stewardship, Zahira College became one of the leading schools in the country. Jayah emerged as a leader of the Muslim community of the country.

He entered the politics and became a prominent figure in pre-independence politics of Sri Lanka. He was elected to the legislative council, state council and parliament. He was also a founding member of the United National Party. He became the minister of Labour and Social Service of the first independent government of Sri Lanka. After retiring form politics, Jayah was appointed as the first high commissioner for Ceylon in Pakistan. He died in 1960.



***Jabbar Ali***
***k/Enasal golla C.C.***
***Deltota.***

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

## I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்




தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலைய மான இஸ்லாமிக் புக் ஹவுஸின் வெளியீட்டகத்தின் வெற்றி இலக் குடன் 'வெற்றிப் பாதை' உசாத்துணை நூல் வெளிவந்துள்ளது.

முற்றிலும் புலமைப்பரிசில் எழு தும் மாணவர்களின் நலன் கருதி தயாரிக்கப்பட்ட 'வெற்றிப் பாதை' கூடிய மதிப்பெண்களைப் பெற உதவியளிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

கணிதமும் நுண்ணறிவும், தமிழ் குறிப்பும் பயிற்சியும், ஆங்கிலம், சிங்களம் போன்ற விட யங்களை உள்ளடக்கி இந்நூல் இலகு முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

பல கிராமங்களில் தமது விரிவுரைகளை நடத்தி வருகின்ற பல நுணுக்கத் திறமை மிக்க ஆசிரியரான எம்.எப். நியால் மொஹமட் அவர் களால் தயாரிக்கப்பட்ட உசாத்துணை நூல் இது வாகும். இந்த ''வெற்றிப் பாதை'' நூல் இஸ்லாமிக் புக் ஹவுஸினால் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இந்நூல், அழகிய முன் அட்டையைத் தாங்கியும் நியாயமான விலையில் மாணவர்களின் அறிவுத் தேடலுக்கு வித்திட்ட வண்ணம் இஸ்லாமிக் புக் ஹவுஸ் விற்பனை நிலையத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்வதற்கு தயாராக உள்ளது.

கொழும்பில் மட்டுமல்லாது, அதனை அடுத்து வாழும் மாணவர் களின் நலன் கருதி இப்புத்தகத்தை (வெற்றிப் பாதை) பெற்றுக் கொள்ள எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட் டுள்ளன.

எங்கள் வலைத்தளம் www.ibh.lk மூலமாகவும் தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், அதனை அனைத்து மாணவர்களின் கைகளிலும் தவழ விடுவதற்கு இஸ்லாமிக் புக் ஹவுஸ் ஊழியர்கள் தயாராக உள்ளனர்.

**மேலதிக விபரங்களுக்கு**
**இல. 77 தெமடகொட வீதி,**
**மருதானை, கொழும்பு 09.**

**தொடர்புகளுக்கு:**
**0112 684851, 0112669191**

### அறிவுக் களஞ்சியம்...

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. 286
2. பொய்பேசுதல், மாறு செய்தல், நம்பிக்கைத் துரோகம்
3. போலி நபிமார் 4. ஹவாரியூன்
5. நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்
6. ஸதகதுல் ஜாரியா, பயன்படும் கல்வி, துஆ செய்யக் கூடிய ஸாலிஹான பிள்ளைகள்
7. சூரா யாஸீன்
8. அப்துல்லாஹ் இப்னு ஸையித் (ரழி) அவர்கள்
9. ஸிப்பீன் யுத்தம் 10. 83
11. ஹிஜ்ரி 35 இல்
12. அன்னை கதீஜா (ரழி), அன்னை ஸைனப் (ரழி)
13. ஹிஜ்ரி 35 இல் 14. மஸ்ஜிதுல் குபா
15. ஹிஜ்ரி 4 இல்
16. மகத்துவமிக்க மாதம்

**பொது அறிவு**

1. டொக்டர் ஸாஹிர் ஹுசைன்
2. புதிய கைத்தொழில்மய நாடுகள்
3. 1976 இல்
4. 15.02.1982
5. 14.04.1979

## எண்ணங்களின் வண்ணங்கள் - 21

**தலைப்பு: டெங்கிலிருந்து பாதுகாப்பு**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 ஏப்ரல் 25**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 17

## கண்டி இராச்சியத்தில் முஸ்லிம்கள் - பகுதி II

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்தெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

செனரத் மன்னன் தனக்குப் பின் கண்டி இராச்சியத்தின் ஆட்சியை தனது பிள்ளைகளுக்கு மத்தியில் பகிர்ந்தளித்தான். கண்டி பிராந்தியம் இளவரசன் மஹா அஸ்தானவுக்கும் மாத்தளைப் பிரதேசம் இளவரசன் குமாரசிங்கனுக்கும் வழங்கப்பட்டன. தந்தையின் மரணத்தின் பின் இளவரசன் மஹா அஸ்தான 2 ஆம் இராஜசிங்கன் என்ற சிம்மாசனப் பெயரோடு அரியணை ஏறினான். கி.பி. 1635-1687 வரை 52 ஆண்டுகள் 2 ஆம் இராஜசிங்கன் கண்டியின் மன்னனாக இருந்தான்.

இலங்கை அரசியல் வரலாற்றில் 2 ஆம் இராஜசிங்கனுக்கு சிறப்பான இடமுண்டு. கண்டி அரசியலில் அவன் காலப் பிரிவு செழிப்பான வரலாற்றுக்கு உரித்துடையதாக அமைந்தது. மிகச் சிறந்த ஆளுமையும் துணிச்சலும் மிக்க போர் வீரனாக அவன் காணப்பட்டான். இளவரசனாக இருந்தபோது கி.பி. 1630 இல் கொன்ஸ்டான் டீஸா தலைமையில் வந்த போர்த்துக்கேயப் படையை ரந்தெனிவல என்ற இடத்தில் அவன் அழித்தான். கண்டி இராச்சியத்தின் புகழ்பூக்கக் காரணமாக இருந்த இந்தப் போரை இராஜசிங்கனே முழுமையாக வழிநடத்தினான். அவ்வாறே, 1638 ஆம் ஆண்டு போர்த்துக்கேய தளபதி தியோகுதி மொலோ கஸ்ரோலின் தலைமையில் வந்த போர்த்துக்கேயர் படையை கன்னொறுவையில் அழித்தான். போர்த்துக்கேயரை இந்த நாட்டை விட்டுத் துரத்த வேண்டும் என்பதே இராஜசிங்கனின் இலட்சியமாக அமைந்தது. அதனை சாதிக்க வலிமையான கடற்படை அவசியம் என்பதை உணர்ந்த மன்னன் இன்னோர் ஐரோப்பிய இனத்தவரான ஒல்லாந்தரோடு இதற்காக தொடர்பை ஏற்படுத்தினான். ஒல்லாந்தரின் ஒத்துழைப்போடு 1658 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரை இந்நாட்டில் இருந்து துரத்தியடித்தான். போர்த்துக்கேயர் வசமிருந்த பெரும் பகுதியை கண்டி இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான். எனினும், 1658 இன் பின்னர் ஒல்லாந்தரோடும் பகைமையோடு செயற்பட வேண்டிய நிலை உருவானது.

இரண்டாம் இராஜசிங்கனின் காலப் பிரிவு முஸ்லிம்களைப் பொறுத்தவரையிலும் சிறப்பானதாகவே அமைந்தது. தந்தை செனரத்தைப் போலவே இராஜசிங்கனும் முஸ்லிம்களோடு நல்லுறவு பேணினான். இவனது காலத்திலும் முஸ்லிம்கள் கண்டியில் குடியமர்ந்தனர். இம்மன்னனது காலப் பிரிவில் 1645 இல் காலியைச் சேர்ந்த சுல்தான் குட்டியா என்ற மருத்துவர் கம்பளைக்கு அருகில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டார். இவரது பரம்பரையினர் கி.பி. 1874 வரை அங்கு குடியிருந்ததாகவும் அவர்கள் காலி மருத்துவர்கள் என அழைக்கப்பட்டதாகவும் கலாநிதி தேவராஜா குறிப்பிடுகிறார். இரண்டாம் இராஜசிங்கனின் பெஹெத்தோ முனாந்திரமாகவும் அரச மருத்து வராகவும் பல்கும்புரே வைத்திய திகல ராஜகருண கோபால முதியான்சேலாகே சேக் முஹம்மது உடையார் இப்னு அலி இப்னு குபால் உடையார் பணிபுரிந்துள்ளார்.

இரண்டாம் இராஜசிங்கனின் வெள்ளவாய ரந்தெனிவல போரில் முஸ்லிம்களின் தனி இராணுவப் பிரிவு ஒன்று இடம்பெற்றிருந்தது. ''ஒட்டுபஹ்திய'' என இது அழைக்கப்பட்டது. இப்போரில் அடைந்த வெற்றியை கண்ணியப் படுத்தும் வகையில் மன்னன் ஹகுரன்கெத மஹா தேவாலயத்துக்கு வழங்கிய அன்பளிப்புப் பிடவையில் இந்த ஒட்டகப் படை ஓவியமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. நிரந்தரப் படைப் பிரி வொன்றை அமைத்துக் கொள்வது சாத்தியமற்றி ருந்த ஒரு காலப் பிரிவில் முஸ்லிம்களது தனிப் படையணி ஒன்றுக்கு இடமளிக்கப்பட்டிருந்தமை சிறப்பானதாகும்.

மன்னன் இராஜசிங்கன் கி.பி. 1687 இல் மரண மடைந்ததைத் தொடர்ந்து அவனது மகன் 2 ஆம் விமலதர்ம சூரியன் அரசபீடம் ஏறினான். இவனை அடுத்து வீர நரேந்திர சிங்கன் ஆட்சிபீடம் ஏறினான். இவனே கண்டியின் கடைசி சிங்கள மன்னனாவான். இவனுக்குப் பின் வந்த மன்னர்கள்



அனைவரும் நாயக்க மன்னர்களாகவே இருந்தனர். எனினும், அனைவரும் பௌத்த சமயத்தைத் தழுவி பௌத்தர்களாகவே வாழ்ந்தமை குறிப் பிடத்தக்கதாகும்.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் கி.பி. 1747-1781 வரை கண்டியின் மன்னனாக இருந்தான். இவனது காலப் பிரிவு முஸ்லிம்கள் மன்னனோடு மிக நெருக்கமான உறவு பேணிய காலப் பிரிவாகும். இம்மன்னன் பதவி ஏற்ற ஆண்டில் ராஜபக்ஷவைத் திய திலக கோபால ஷேக் முஹம்மது முதலி உடையார் என்பவருக்கு உடுநுவர பகுதியில் காணி வழங்கி குடியமர்த்தினான். கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் அரசியல் வாழ்வில் முஸ்லிம் மருத்துவர்கள் வகித்த பங்கு அளப்பரியதாகும். மன்னது நம்பிக் கைக்குப் பாத்திரமான அதிஉயர் நிலையை அவர்கள் பெற்றிருந்தனர். இதற்கு மன்னன் அவர்களுக்கு வழங்கிய செப்புப் பட்டயங்கள் சான்றாக அமைகின்றன. கி.பி. 1759 ஆம் ஆண்டு ராஜகருண வைத்திய திலக ஷேஹ் முஹம்மது உடையார் எனும் வைத்தியருக்கு வெலம்பொட வடதெனிய பிரதேசங்கள் வழங்கப்பட்டன. இக்காலப் பகுதியில் இடம்பெற்ற இன்னொரு முக்கிய நிகழ்வு முஸ்லிம்களின் ராஜ விசுவாசத்துக்கு குறிப்பிடத்தக்க சான்றாக அமைகின்றது.

கி.பி. 1760 ஆம் ஆண்டு மன்னனைக் கொலை செய்வதற்கான ஒரு முயற்சி மல்வத்தை விகாரை யின் பிரதம மதகுருவாகவும் இரண்டாம் அதிகாரம் ஆகவும் இருந்த சமனக்கொடி அரச சமையலகத்தில் பிரதான சமையல்காரனாக இருந்த மொலதந்த ராலா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது. இதனை அறிந்த அரச வைத்தியரான பல்கும்புரே வைத்திய திலக ராஜகருண முதலியார் மன்னனுக்கு அறிவுறுத்தி அவனைப் பாதுகாத்தார். இதன் நன்றியுபகாரமாகவே 1760 இல் இம்மருத்துவருக்கு கடபேரிய எனும் பகுதி அன்பளிப்பாக வழங்கப் பட்டது. கண்டியின் இறுதி மன்னனான ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் காலப் பிரிவில் (1798-1815) பிரதம அமைச்சர்களாக இரந்த பிலிமதலாவ, எகலோபொல ஆகியோருடன் இணைந்து உயர் நீதிமன்ற நீதிபதியாக 'ராஜகருண கோபால முதியான்சே ராலஹாமி' எனும் மருத்துவர் பணி புரிந்தார். நாம் மேற்குறித்த அம்சங்கள் அனைத்தும் கண்டி மன்னர்களிடத்தே முஸ்லிம்கள் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கான ஆதாரங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# உயிருக்குள் கலந்த உறவுகள்



''டொக்டர் ரஷீத் லண்டன்ல இருந்து பெமிலியோட வருகிறாராம்'' என ரஷீதை பார்ப்பதற்காக மஹ்தியின் வீட்டின் முன்னால் பெரும் கூட்டம் கூடியது. பல வருடங்களின் பின் தன் உடன் பிறவா சகோதரனைக் காணும் சந்தோஷத்தில் பூரிப்புடன் காணப்பட்டான் மஹ்தி.

கார் ஊருக்குள் நுழைந்ததும் ரஷீதுக்கு பழைய ஞாபகங்கள் அரங்கேறின.

பிஸியாக வேலை செய்து கொண்டிருந்த நிலாயாவிடம் கிழிந்த சட்டையுடனும் பரட்டைத் தலையுடனும் உடைந்த பாத்திரத்துடனும் ஒரு 10 வயது இந்துப் பையன் சிவா...

''அக்கா அக்கா... சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு... ஏதாச்சும் சாப்பிடக் கொடுங்கோ''

''ஒன்னுமில்ல போ, திறந்த வீட்டுல என்னமோ நுழையிற மாதிரி விடிஞ்சாலே வந்துடுவாங்க'' என எரிஞ்சலாக கதவை சாத்தினாள் நிலாயா.

**ஏ.ஏ.எம். முபீஸ்**
**ஸிராஜியா வளாகம், ஓட்டமாவடி**

அந்த ஏரியாவில் உள்ள எல்லா வீடுகளிலும் சாப்பாடு கேட்டு விட்டான் சிவா. ஆனால், பாவம் அவனுக்கு எதுவும் யாரும் கொடுக்கவில்லை. அவனைக் கண்டதும் சிலர் கதவை சாத்துகின்றனர். சிலர் கண்டும் காணாதது போல் செல்கின்றனர்.

பாவம் அந்தப் பிஞ்சு உடல். பட்டினி கிடந்ததால் மேற்கொண்டு நகர முடியவில்லை. சுட்டெரிக்கும் வெயிலில் ஒதுங்க இடம் தேடி மர நிழலில் ஒதுங்குகிறான். வெயில் உச்சிக்கு வர, மரம் நிழல் தர மறுத்து விட்டது. அவனது உடல் எழுந்து நடக்க மறுத்தது. வெயிலில் வெந்து போகிறான் சிவா. ''யாராவது உதவி செய்ய மாட்டார்களா?''

என ஏங்கியது அந்த பிஞ்சு மனம்.

இறையருளை எதிர்பார்த்து வாழும் குடும்பம்தான் முபாரக்- நிஸா குடும்பம். அவர்களது செல்ல மகன்தான் மஹ்தி. 10 வயது மஹ்தி பாடசாலை முடிந்து அந்த வழியாக வந்தவன், சிவாவின் பரிதாப நிலையைக் கண்டதும் துடிதுடித்தான். அவன் இயல்பிலேயே இரக்க குணமுடையவன்.

மெதுவாக சிவாவை எழுப்பினான்.

''தம்பி... தம்பி... எழும்புங்க...''

மெதுவாக கண்விழித்தான் சிவா. ஆனால், எதுவும் பேச முடியவில்லை. அவனிடம் மஹ்தி அதிகம் கேள்விகள் கேட்கவில்லை. அந்தப் பையனால் எழும்ப முடியாது என யூகித்துக் கொண்டான்.

வெயில் அதிகம் என்பதால் தனது சேட்டைக் கழற்றி சிவாவை போர்த்தி விட்டு தனது வீட்டுக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றான். பிள்ளை மேலில் சட்டையில்லாமல் அவசரமாக ஓடி வருவதைக் கண்டு பயந்த நிஸா,

''என்ன மகன் இப்படி வாரீங்க... என்ன நடந்திச்சு?''

''எனக்கு ஒன்னுமே இல்ல உம்மி, பயப்படாதீங்க... அபீ எங்க?''


''அபீ குளிக்காங்க மகன்''

''அபீ அபீ...''

என குளியலறையை நோக்கி ஓடினான். கூடவே நிஸாவும் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''என்ன மகன்?''

நடந்தவற்றை கவலையுடன் சொன்னான்.

''அவசரமா வாங்க அபீ, பாவம் அந்தப் பையன்''

நிஸா, முபாறக் இருவரும் தன் செல்ல மகனின் பெருந்தன்மையை நினைத்து பூரிப்படைந்தனர்.

சிவாவை தங்களது வீட்டுக்கு அழைத்து வந்து உணவளித்து, குளிக்க வைத்து சுத்தப்படுத்தினர். சிவாவுக்கு தங்க இடமில்லை, தாய்- தந்தையுமில்லை. அவன் ஒரு அநாதை. அவனை தன்னுடன் இருக்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டான் மஹ்தி. வீட்டில் இடம்கொடுக்க வேண்டாம் என பலரும் பலவிதமாக நிஸாவிடம் கூறினர். ஆனால், நிஸா எதையும் பொருட்படுத்தவில்லை. அவனையும் தன் பிள்ளை போல் பராமரித்தார். பாடசாலையில் அவனும் படிக்க வேண்டும் என யோசித்தனர்.

மஹ்தி சொல்லிக் கொடுத்து படித்துக் கொள்வான். ஊண், உறக்கம் அனைத்தையும் சிவாவுடன் ஆக்கிக் கொண்டான். மஹ்தியின் நற்பண்புகளின்பால் கவரப்பட்டான் சிவா. மஹ்தி போல் தானும் இறை வணக்கம் செலுத்த வேண்டும், தானும் அவனுடைய மார்க்கத்தில் இணைய வேண்டும் என ஆசை கொண்டான். அதன்படி இஸ்லாத்தை ஏற்றான்.

புலமைபரிசில் பரீட்சையில் மஹ்தி சித்தியடைந்தான். மஹ்தியை விட 20 புள்ளிகளால் (சிவா) ரஷீத் சித்தியடைந்தான். ரஷீதை விட மஹ்தியே ரஷீத் விடயத்தில் மட்டற்ற மகிழ்ச்சி பெற்றான். முபாறக்கின் ஆசைப்படி மஹ்தியையும் ரஷீதையும் மத்ரஸாவில் சேர்த்தனர். முபாரக் பெரிய பணக்காரன் இல்லை. என்றாலும், இரு பிள்ளைகளுக்காகவும் கடுமையாக கஷ்டப்பட்டு உழைத்தான். மத்ரஸா படிப்பை முடித்து விட்ட இருவரும் அடுத்த கட்ட நகர்வை மேற்கொண்டனர்.

''டொக்டர் ரஷீத் வாராரு''

சத்தம் கேட்டதும் சுயநினைவுக்கு வந்தான் மஹ்தி.

ரஷீத், ரஷீதின் மனைவி சுல்பா, மகன் மூவரும் காரில் இருந்து இறங்கினர். ரிஸாவின் கண்ணில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. மஹ்தியை ஓடி வந்து கட்டியணைத்தான் ரஷீத். முபாரக் தன் பேரக் குழந்தையை தூக்கிக் கொஞ்சினார். ரிஸாவும் மஹ்தியும் மனைவி பர்ஹத்துடன் சுல்பாவை வீட்டினுள் அழைத்துச் சென்றனர்.

மஹ்தி ரஷீதின் மகனை தூக்கி முத்தமிட்டான்.

''உங்கட பெயர் என்ன மகன்''

''மஹ்தி அங்கள்''

அவனை நெஞ்சில் இறுக அணைத்தான் மஹ்தி.

தோளில் ரஷீத் கை வைத்ததை உணர்ந்த மஹ்தி ரஷீதை இறுக அணைத்து கண்ணீர் வடித்தான்.

''மஹ்தி நீதான் என் உலகம். நீ செய்த உதவிய என் உயிருள்ளவரை மறக்க மாட்டேன்''

மஹ்தி ஒரு பொறியியலாளரும் பள்ளி இமாமாகவும் சேவை செய்கிறான்.


''அல்லாஹ் அக்பர்... அல்லாஹு அக்பர்''

பாங்கோசை கேட்டதும் முபாரக், மஹ்தி, ரஷீத் மூவரும் பள்ளிவாசலை நோக்கி நடை போட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழிகள் இல்லாவிட்டாலும் வழிகள் உண்டு

✍ அயாத் அஹமட்

பெப்ரவரி மாதம் இடம்பெற்ற தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவுக்கு வருகை தந்திருந்த அனைவரது பார்வைகளும் சகோதரி பாத்திமா சனூரியாவை சுற்றியே வலம் வந்திருந்தன. மாவனல்லை உயன்வத்தயைச் சேர்ந்த சகோதரி சனூரியா பிறப்பிலேயே கண் பார்வை அற்றவராகப் பிறந்தாலும், தன் அயராத விடாமுயற்சியினால் பல்கலை புகுந்து பட்டத்தை வென்றுள்ளார். இளவயதிலேயே தந்தையைப் பிரிந்த தன் மகள் எந்தக் குறையையும் உணராதவாறு இவ்வளவு தூரம் வளர்த்து விட்ட பெருமை அவரது தாய்க்கு உண்டு. மிக இக்கட்டான வறுமையின் கோரப்பிடியில் கூட மனம் தளராது சாதாரண வேலைகள் செய்து கிடைத்த சொற்ப வருமானத்தின் ஊடாகவே இந்த மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது. சகோதரி சனூரியாவுக்கு இரு சகோதரிகளும் ஓர் இள சகோதரனும் உள்ளனர். அவருடன் மேற்கொண்ட உரையாடலை அகரம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்சியடைகின்றோம்.

**அகரம்:** இந்த மகிழ்வான தருணத்தில் நீங்கள் படைத்திருக்கும் மகத்தான சாதனை பற்றி எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாமா?

**பாத்திமா சனூரியா:**
அல்ஹம்துலில்லாஹ், முதலாவது அல்லாஹ்வுக்குத்தான் நன்றி கூற வேண்டும். பல்கலைக்கழக நுழைவு என்பது எம்மைப் போன்றவர்களுக்கு எட்டாக்கனி என்றே எண்ணினேன். இருந்தும் நான் என் முயற்சியைக் கைவிடவில்லை. ''முயற்சிப்பவனுக்கு இறைவன் அருளுவான்'' என்ற வாக்குக்கு இணங்க உயர் கல்வி வாய்ப்பு எனக்கு கிடைத்தது. உண்மையிலேயே இந்த வாய்ப்பை கனவிலும் கூட எண்ணி இருக்கவில்லை.

மூன்றாம் நிலைக் கல்வி என்பது இலட்சத்தில் ஆயிரம் பேருக்கு வழங்கப்படும் ஒரு வாய்ப்பு. இவ்வாய்ப்பு எனக்கு கிடைத்ததையிட்டு நான் பெரும் மகிழ்வடைகிறேன். உண்மையாக கூறுவதெனில், இது ஒரு பெரும் சாதனையல்ல, சாதனைக்கான முதற்படி. இருந்தாலும் எம்மைப் போன்றவர்கள் இம்முதற்படியைத் தொடுவது பெரும் சவாலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சவாலை எதிர்நோக்கி அவற்றை வெற்றிகரமாக நிறைவு செய்ததையிட்டு அக மகிழ்கிறேன்...

கண் பார்வையற்றவர் என்று ஆரம்பத்தில் இரண்டு வருடங்கள் பாடசாலைக்குக் கூட செல்ல முடியாது கல்வியின் கதவுகள் எனக்காய் திறக்க மறுத்தன. பார்வை குறைபாடு என்பதையும் தாண்டி பாடசாலை சேர்த்து கற்பிக்க வேண்டும் என முழு முயற்சியுடன் ஈடுபட்ட எனது தாயே எனக்கு நான் அறியாத வயதில் எனக்கான பெரும் சக்தியாகத் திகழ்ந்தவர். அவரே எனக்கு பெரும் ஊக்கத்தையும் ஊக்குவிப்பையும் அளித்தவர். பொருளாதார சுமைகளிடையே அவர் என்னைக் கற்பிக்க வேண்டும் என உறுதி கொண்டிருந்தார். அடுத்து எனக்கு ஆரம்பக் கல்வி கற்பதற்கான வாய்ப்பு இரண்டு ஆண்டுகள் கழித்து தெல்கஹகொட கனிஷ்ட வித்தியாலயத்தில் வரபேலா ஆசிரியரின் அர்ப்பணத்தினால் கிடைத்தது.

இதன்போது பாடசாலையில் சேர்த்துக் கொள்வதில் உதவியளித்த அப்போது விசேட தேவைக் கல்விப் பணிப்பாளராக இருந்த தென்னகோன் அவர்களுக்கும் பாடசாலை அதிபராக இருந்த அஸீஸ் அவர்களுக்கும் நான் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். ஹபீலா ஆசிரியை மூன்று ஆண்டுகள் தனியாக கவனமெடுத்து எனக்கு கற்றுத் தந்தார். அதன் பின்னர், தரம் 6-11 வரை திஹாரிய இஸ்லாமியர் அங்கவீனர் நிலையத்தில் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இங்கு என்னை நானே அறியும் வாய்ப்பும் ''அங்கவீனம் என்பது இயலாமை அல்ல'' என்பதையும் பெரிதும் உணர்ந்தேன். அதன் பின் நூரானிய முஸ்லிம் ம.வி. உயர் கல்வியை கற்று பல்கலைக்கழகம் தெரிவானேன். இந்த நீண்ட பயணத்தில் உதவி ஊக்கமூட்டிய தாய், சகோதர சகோதரிகள், ஆசிரியர்கள், நண்பர்கள் உட்பட அனைவரும் எனக்கு பெரிதும் ஒத்துழைத்து ஊக்குவித்தார்கள்.

**அகரம்**: விழிகள் இருந்தும் சோம்பிக் கிடப்பவருக்கான உங்களது அறிவுரை என்ன?

**பாத்திமா சனூரியா**: ஆம், உலகில் இறைவன் எம் அனைவரையும் ஒரு நோக்கத்தின் அடிப்படையிலேயே படைத்துள்ளான். அதனடிப்படையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் ஆற்றலை வழங்கியுள்ளான். விழிகள் அற்ற எம்மைப் போன்றோருக்குத்தான் விழியின் பயன்பாடு எத்தகையது என்று தெரியும். அல்லாஹ்வின் அருளால் அனைத்து உறுப்புக்களையும் ஆரோக்கியமாகப் பெற்று உங்கள் திறன்களை நீங்களே அறியாது காலத்தை செலவழித்தால் அது உங்களுக்கு மட்டுமல்லாது, உங்களை சார்ந்தோர் மற்றும் சமூகத்துக்கு செய்யும் துரோகம் என்பதே எனது கருத்தாகும்.

**அகரம்**: பார்வை அற்றோருக்கான அறிவுரை...?

**பாத்திமா சனூரியா**: இக்கேள்வியானது எம்மைப் போன்ற பலர் எதிர்பார்ப்பதாக எண்ணுகிறேன். ஏனெனில், நானும் பல சமயங்களில் என் விதியை நொந்து கவலையடைந்துள்ளேன். எனினும், எனக்குக் கிடைத்த ஊக்கமும் வழிகாட்டலும் விதியை நொந்து கவலைப்படாது இயலாமையை ஒரு சவாலாக ஏற்க என்னால் முடிந்தது.

அன்பின் சகோதர, சகோதரிகளே! உலகில் வாழும் அனைவரும் ஏதே ஒரு வகையில் சோதிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர். அச்சோதனைகளை சவால்களாக ஏற்றுக் கொள்பவனே உண்மையில் வாழ்வில் வெற்றி அடைகிறான். நண்பர்களே! எமக்கு இறைவனால் தரப்பட்டுள்ள இச்சோதனையை சோதனையாக எண்ணாமல் எமக்கொரு சவாலாக எண்ணி எமக்குள் இருக்கும் திறனை அறிந்து அதற்கான வழிகாட்டலை பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், என்னால் இதனைச் செய்ய முடியுமா? என்று எண்ணாமல் ''முடியும்'' என அதை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்னும் சமூகத்தில் எல்லோரும் எம்போன்றோரை 'இயலாதோர்' என எண்ணாது ஊக்கமும் வழிகாட்டல்களையும் வழங்க வேண்டும் என அகரம் சஞ்சிகையினூடாக வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெக்ஸிகோ
# MEXICO



ஜனாதிபதி
பெலிப்பே கால்டெரோன்

அமெரிக்காவின் நிழலில் இயங்கும் நாடு மெக்ஸிகோ. அடிக்கடி போதைப் பொருளுடன் தொடர்பான குற்றங்கள் பற்றிய செய்திகளால் மெக்ஸிகோவின் பெயர் பிரபலமடைந்திருக்கின்றது.

தலைநகரம் - மெக்ஸிகோ நகரம்

பரப்பு - 19,72550 Km

நீர் - 2.5%

மக்கள் - 107,029,000

நாணயம் - mxn

மெக்ஸிகோவின் டாம்பீகம்

மெக்ஸிகோ உலகின் மிகப் பெரும் டாம்பீக வலயங்களுள் ஒன்று. அதுவே இலத்தீன் அமெரிக்க நாடுகளுள் பொருளாதார ஒத்துழைப்புக்கும் வளர்ச்சிக்குமான முதன்மை நாடு. உலக நிலப் பரப்பளவில் 15 ஆவது இடத்தைப் பெற்றுள்ள அது, மக்கள் தொகையில் 11 இடத்தை வென்றுள்ளது.

வரலாறு

அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே மெக்ஸிகோவில் அதி உன்னத நாகரிகங்கள் வளர்ச்சி அடைந்திருந்தன. 1921 இல் மெக்ஸிகோ மக்களை அடிமைப்படுத்திய ஸ்பெயின் வெகு நீண்டகாலம் அங்கு தனது வல்லமையைப் பயன்படுத்தி மக்களை ஆண்டது.

அமைப்பு

மெக்ஸிகோ ஒரு கூட்டரசாகும். அங்கு 31 மாநிலங்கள் ஒன்றிணைந்துள்ளன. 113 பில்லியன் மக்கள் தொகையில், பல்வேறு இனங்கள் கலந்து வாழ்கின்றனர்.

இன்று மெக்ஸிகோவில் இருந்து அமேரிக்காவில் நுழைய சட்டவிரோத குடியேற்றவாசிகளைத் தடுக்க புதிய தடுப்புச்சுவர் கட்டுவதாக டொனால்ட் ட்ரம்ப் கொண்டு வந்த சட்டம் மெக்ஸிகோ மக்களை போராட வைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அகரம்:

சிறுவர்களின் ஆற்றல்களை ஊக்குவித்தல், அவர்களது ஆற்றல்களுக்கு களம் அமைத்தல், அவர்களது சிந்தனைகளை இஸ்லாமியமயப்படுத்தல், மாணவர்களது பாடசாலைக் கற்றலுக்கு மேலதிக உள்ளீடுகளை வழங்குதல், புதிய புதிய தகவல்களை வழங்குவதன் ஊடாக மாணவ வாசகர்களை வலுவூட்டுதல், 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழிகாட்டலை வழங்குதல் முதலான இலக்குகளைக் கொண்டதாக அகரம் மாணவர் சஞ்சிகை 2005 ஆம் ஆண்டு முதல் வெளிவருகிறது.

## சந்தா விண்ணப்பப் படிவம்

**JUST MEDIA FOUNDATION**

Subscription Form

Receipt No:

Date:

Name: ......................................................................

Address: ......................................................................

......................................................................

Tel: ............................ Mob: ............................

E-mail: ......................................................................

Profession: ......................................................................

**PAYMENT DETAILS**

| | 6 Month | Per Year |
|---|---|---|
| Alhasanath | 425.00 | 850.00 |
| Aharam | 400.00 | 800.00 |
| Prabodaya | 350.00 | 700.00 |
| The Trend | 1125.00 | 2250.00 |

சந்தாக்களை அனுப்ப JMF என்ற பெயருக்கு **MONEY ORDER** எடுத்து தபாலகம் **DEMATAGODA** என குறிப்பிட்டு அனுப்பவும்.
வங்கியில் வைப்பிலிட நாடுவோர் **Just Media Foundation, A/C NO: 79088651, Bank of Ceylon, MARADANA.** எனும் வங்கிக்கணக்கில் குறித்த தொகை பணத்தை வைப்பிலிட்டு உரிய பற்றுச்சீட்டை **77, SRI VAJIRAGNANA MW, COLOMBO -09** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Just Media Foundation
77, Sri Vajiragnana Mw, Colombo -09
Tel: 011 2689324 | Fax: 0112686030
Email: jmflanka@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM அகரம்




எமது வெளியீடுகளில்
விளம்பரம் செய்து
நீங்களும் எமது
சேவையில்
பங்குதாரர்
ஆகலாம்...

# ADVERTISEMENT TARIFF

| Pages | ALHASANATH | | AHARAM | | PROBODAYA | | TREND | | ENGAL THESAM | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT |
| FRONT | - | - | - | - | - | - | - | - | (TOP 2" X 4") | 3,000.00 |
| | | | | | | | | | (BOTTOM 2" X 10.5") | 5,000.00 |
| BACK | (10" X 7") | 60,000.00 | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (9.6" X 7") | 30,000.00 | (HALF 8" X 10.5") | 15,000.00 |
| | | | | | | | | | (QUARTER 8" X 5") | 7,500.00 |
| FRONT IN | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | - | - |
| BACK IN | (10" X 7") | 40,000.00 | (7" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | | |
| **INNER PAGES** | | | | | | | | | | |
| FULL | (9.4" X 7") | 20,000.00 | (9.4" X 6.5") | 12,000.00 | (9.4" X 6.5") | 10,000.00 | (8.6" X 6.2") | 15,000.00 | - | - |
| HALF | (4.7" X 7") | 10,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.3" X 6.2") | 8,000.00 | (8" X 10.5") | 10,000.00 |
| QUARTER | (4.7" X 3.5") | 6,000.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.3" X3.1") | 4,000.00 | (8" X 5") | 5,000.00 |
| COLUMN | (2" X 3.5") | 3,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.1") | 2,000.00 | (2" X 5") | 2,500.00 |
| COLUMN | (2" X 7") | 4,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.2") | 4,000.00 | (2" X10. 5") | 4,500.00 |

*தொடர்புகளுக்கு:*

0778942217 ☎ 0112689324

**JUST MEDIA FOUNDATION**

**No 77, Sri Vajiragnana Mawatha, Colombo-09**

JUST MEDIA FOUNDATION




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஹ்மத் பாபா அல்மஸ்ஸூபி

# மேற்கு ஆபிரிக்காவின் மேன்மிகு அறிஞர்

■ ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம் ■ வரலாற்றில் வாழ்ந்தோர்... **தொடர் 02**




அன்றைய மேற்கு சூடானின் மிக பிரபல்யம் பெற்ற எழுத்தாளரும் தத்துவஞானியும் மிகப் பெரும் ஆளுமையுமான அஹ்மத் பாபா அல் மஸ்ஸூபி தமது வாழ்நாளில் 40 இற்கும் மேற் பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

மேற்கு ஆபிரிக்காவின் திம்புக்டு (Timbuktu) பகுதியின் முதுபெரும் அறிஞராக வரலாறு இவரை வர்ணிக்கிறது. பேராசிரியராகவும் பல்கலை வல்லு நராகவும் இவர் திகழ்ந்தார். இவரது 40 நூல்களும் 40 வேறுபட்ட துறை பற்றிய ஆய்வின் வெளிப்பாடாக அமைந்துள்ளமை சிறப்பம்சம் ஆகும். மேலும் இவர், மேற்கு ஆபிரிக்காவின் திம்புக்டுவின் மிக சிறந்த சாங்கோர் பல்கலைக்கழகத்தின் இறுதி வேந்தராக விளங்கினார்.

எழுதுவதில் பெரும் ஈடுபாடு கொண்ட அஹ்மத் பாபா அல்மஸ்ஸூபி அதற்கு நிகராக வாசிப்பிலும் பெரும் பகுதி நேரத்தை செலவிட்டார். இவர் தனது வசிப்பிடத்தில் தனக்கென ஒரு நூலகத்தைப் பராமரித்து வந்தார். அதில் ஆயிரக்கணக்கான நூல்கள் அலங்கரித்து வந்தன.

கி.பி. 1627 ஆம் ஆண்டு அஹ்மத் பாபா அல்மஸ்ஸூபி என்ற ஆளுமை மறைந்தாலும் மேற்கு ஆபிரிக்க இலக்கிய வரலாற்றில் மங்கா விளக்கை ஏற்றி வைத்த பெருமை அவரையே சாரும். இவரை கௌரவிக்கும் பொருட்டு மேற்கு ஆபிரிக்காவின் திம்புக்டு பகுதியில் 'அஹ்மத் பாபா கல்வியகம்' எனும் பெயரில் 18,000 இற்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட இலக்கிய நூலகம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

### எண்ணங்களின் வண்ணங்கள்
### தரமிருந்தும் இடம்பிடிக்க தவறியவை

ஸுமையா நஸீர், கைறா மு.வி., ஹபுகஸ்தலாவை
ஏ.எப். அப்லா, எருக்கலம்பிட்டி ம.ம.வி., மன்னார்
உனைஸ் முஹம்மத் அமான், நத்வதுல் உலமா க., மூதூர்
பாத்திமா நுஹா, நாப்பாவள மு.ம.வி.
மாஹிர் ஆயிஷா, தாஹா நகர், மூதூர்
மாஹிர் ஹஸன், தாஹா நகர், மூதூர்
என். நுஸ்ருள்ளாஹ், வெலம்பொட மு.ம.வி
எஸ். றிஸ்வான், நேரியகுளம், அனுராதபுரம்
இப்ஹாமா இஸ்மாஈல், பலந்தை மு.வி.
எச்.எம். ஹயா, அமீனியா ஆரம்ப பாடசாலை, வெலம்பொட
எஸ். றிப்கான், வவுனியா
றிப்கா ஸாலிஹ், பாத்திமா ஸஹ்ரா வளாகம், ஓட்டமாவடி
எஸ்.எப். சல்மியா, எருக்கலம்பிட்டி ம.ம.வி.
பாத்திமா நுப்லா, பலந்தை மு.வி.
ஆயிஷா, அல்ஹுதா மு.ம.வி., ரிதிகம
எம்.எம். மின்ஹா, காஹிரா மு.வி., ஹபுகஸ்தலாவ
ஹுஸ்னா ஹுஸைன், நாவின்ன மு.வி., காலி
எப்.எம். தாஜுதீன், உடபிட்டிய மு.ம.வி., தொல்தோட்டை
எம்.என்.எப். நஜீஹா, பறகஹதெனிய தே.பா.
எப். அஸ்னா சுல்பி, மின்ஹாஜ் மு.ம.வி., நிகவொள்ள
எம். அஹமட், கல்பானவ மு.ம.வி.
எம்.யூ.எப். தஹ்மிதா, பதியுதீன் மு.ம.வி. சிலாவத்துறை

---

❖ இன்றுள்ள ஒருநாள் நாளை வரப்போகும் இரு நாட்களுக்கு ஈடானது
- பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்

❖ வசந்தம் ஒரு நாளில் மலர்ந்து விடுவதில்லை. அது போலதான் வாழ்வில் உயர்வதும்
- அரிஸ்டோட்டில்

❖ நீ வெற்றி பெற வேண்டுமா? அப்படியானால் உன் இலட்சியத்தை விட்டு விடாதே
- சாமுவேல் ஸ்மைல்ஸ்


❖ உயர்ந்த தலம் - பொறுமை, உயர்ந்த ஆயுதம் - மன்னிப்பு, உயர்ந்த மகிழ்ச்சி - திருப்தி
- குரு நானக்

❖ எதைக் கண்டு பயப்படுகிறீர்களோ அதைச் செய்யத் தொடங்குங்கள். பயம் செத்துப் போவதைக் காண்பீர்கள் - எமாசன்

சப்ரினா புர்ஹானுதீன்
அல் முஃமினாத் பெ.அ.க., அக்குரணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 19

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

## பாடம் 13

## கணினிசார் பொது அறிவு

தொடர்...

45. கொள்ளளவுப் பெறுமானங்கள் - 1024 Kilobytes 1- Megabytes 1024 Megabytes 1 Gigabytes 1024 Gigabytes 1 Terabytes
46. Modem என்பதன் விரிவாக்கம் - Modulator Demodulator
47. ALU என்பதன் விரிவாக்கம் - Arithmetic - Logical Unit
48. கணினித் தொகுதியில் தடையற்ற மின் வழங்கல் கருவியை (UPS) பயன்படுத்துவதன் நோக்கம் மின் துண்டிப்பின்போது மின்காப்பினை வழங்கல்
49. மின்னஞ்சல் முகவரிக்கான குறியீடு - @
50. குறும்பர்கள் (hacker) எனப்படுவோர் - கணினி வலையமைப்பினுள் உட்புக முயற்சிப்போர் அல்லது பாதுகாப்பை உடைத்துக் கொண்டு உட்புகுவோர் (hackers) எனப்படுகின்றனர்.
51. கணினி வலைப்பின்னலின் பிரதிகூலமாக கருதப்படுவது - திருட்டுத்தனத்துக்கான வழிகள் (Open to Hackers)
52. அக இணையம் (Intranet) எனப்படுவது - குறிப்பிட்ட பயனர் அல்லது குழுக்களால் பயன்படுத்தப்படும் வலையமைப்பு
53. செய்நிரலாக்க மொழிகள் - C , Java ,Visual Basic
54. முறைமை மென் பொருள்கள் (System Software) & Microsoft Windows - XP, Vista, 7 ,8,10
55. தேடற்பொறிகள் - Google, yahoo, AOL
56. புள்ளிக்கு இடது பக்கத்தில் உள்ள எழுத்துக்களை அழிக்க விசைப் பலகையில் எந்த பொத்தானை அழுத்த வேண்டும்? Backspace
57. எழுத்துக்களை பொறுத்தவரையில் என்னென்ன வடிவூட்டங்களை செய்யலாம்?
    1) Bold 2) Italics 3) Fonts 4) Size
58. அட்டவணைச் செயலி Microsoft Excel
59. நிழற்பட வடிவங்கள் - 1) GIF 2) MPEG 3) NxView
60. தகவல் தொழிநுட்பம் சார்ந்த சேவைகள்
    1) மின் அரசாண்மை (e-governance)
    2) அழைப்புதவி மையங்கள் (Call Centers)
    3) தரவு மேலாண்மை (Data Management)
    4) தொலை மருத்துவம் (Tele Medicine)
61. ஆவணத்தை சேமிப்பதற்கான கட்டளை - file-save
62. உரைகளை வெட்டுவதற்கான சாவிச்சேர்மானம் எது? Ctrl+X



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. புள்ளிக்கு வலது பக்கத்தில் உள்ள எழுத்துக்களை அழிக்க விசைப் பலகையில் பயன்படுத்தப்படும் பொத்தான் - Delete

64. ஒரு தலைப்பை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும் - TAB Header

65. தனியாள் கணிப்பொறி முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு? 1975 66. கணினியின் மூளை (System of the brain) நுண்செயலி

67. குறுவட்டின் (CD) விட்டம் என்ன? 120mm

68. Ctrl + I, Ctrl + U, Ctrl + B - சாவிச் சேர்மானங்களின் செயற்பாடுகள் முறையே Italic> Underline> Bold

69. Ms office இல் Shift சாவியை அழுத்தினால் எழுத்துக்கள் மாற்றம் அடையும் - ; r -->R

70. இரண்டு வார்த்தைகளுக்கிடையே இடைவெளி அமைக்கப் பயன்படும் விசையின் பெயர்? Spacebar

71. MS Paint திறப்பதற்கான வழிமுறை? Start - Programs - Accessories - Paint

72. சுட்டி (Mouse) ஒரு? உள்ளீட்டு கருவி

73. வெற்றிடக் குழாய் (Vacuum tube) உரிய தலைமுறை முதலாம் தலைமுறை

74. Ms paint இல் தவறாக வரைந்த படத்தை அழிப்பதற்கு பயன்படுவது - Eraser

75) கணினித் திரைகளின் வகைகள் (Computer Screen) - 1) LCD 2) CRT 3) LED

76. தரவைக் குறிக்கும் DATA என்ற சொல்லின் மூலம் - Datum

77. DBMS க்குத் துணை நிற்கும் மொழி - SQL

78. இணையத்தின் வழியே கல்வி கற்பதைக் குறிப்பது, மின் கற்றல் (e-learning)

79. பதிவுகளை அகர வரிசையில் (Alphabet) அல்லது எண்களின் ஏறு, இறங்கு வரிசையில் ஒழுங்கு செய்வது வரிசையாக்கம் (Sorting)

80. முழு ஆவணத்தையும் தேர்ந்தேடுக்க பயன்படுத்தப்படும் சாவிச் சேர்மானம் - Ctrl+A

81. Search and Replace உரையாடல் பெட்டியை பெறுவதற்கான சாவிச் சேர்மானம் - Ctrl+F

82. பந்தி உரையாடல் பெட்டியை பெறுவதற்குத் தேவையான கட்டளை - Format-Paragraph

83. இரண்டு சிற்றறைகளை ஒன்றாக மாற்றுவதற்கு பயன்படுவது - Merge

84. அடிக்குறிப்பை உருவாக்குவதற்கு பயன்படும் - TAB Footer

85. Random Access Memory(RAM) என்பதன் தமிழ் பதம் - தற்போக்கு பெறுவழி நினைவகம்

86. போலியான வன்பொருள், மென்பொருள்களை உருவாக்குவது, பயன்படுத்துவது அழைக்கப்படுவது - piracy

87. மாறிகள் (Variables) எனப்படுவது - சர நிலையுரு (String Literal)

88. Ms Word இல் எழுத்தை தடிமனாக்க பயன்படுத்துவது - Ctrl+B

89. AVI என்ற வடிவத்தை உருவாக்கிய நிறுவனம் - Microsoft

90. Multimedia Messaging System (MMS) என்பதன் தமிழ் பதம் - பல்லூடக செய்தி வழங்கும் அமைப்பு

91. பல்லூடக கோப்புக்களை உருவமைக்க உதவும் மென்பொருள்கள் - Flash. Maya

92. தன்னைத் தானே நகலெடுத்துப் பெருக்கிக் கொள்ளும் மென்பொருள் virus

93. குறிப்பிட்ட வாடிக்கையாளர் சேவைக்காக தொலைபேசி அடிப்படையில் அமைந்த சேவை பகிர்வு எது? Call Center (அழைப்புதவி மையங்கள்)

94. ஷிக்கார்ட் என்பவர் முதல் மெக்கானிக்கல் கால்குலேட்டரை உருவாக்கிய ஆண்டு - 1963

95. சார்ல்ஸ் பேபேஜ் அனலிடிக்கல் இயந்திரத்தை உருவாக்கிய ஆண்டு - 1823

96. போர்ட்ரான் கணினி மொழி வெளியிடப்பட்ட ஆண்டு - 1957

97. C என்ற மொழி உருவான ஆண்டு - 1972 இதுவே இன்றை நவீன மொழிகளின் முன்னோடி

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தாக்க சிந்தனை...

***ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)***
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology

புத்தாக்க சிந்தனை என்றால் என்ன? புத்தாக்க சிந்தனைக்கும் மூளையின் அமைப்புக்குமிடையிலான தொடர்பு, புத்தாக்க சிந்தனைக்கான தடைகள் போன்றவற்றை கடந்த இதழில் வாசித்து விளக்கம் பெற்றிருப்பீர்கள். அந்தப் பின்னணியுடன் மாணவர்களுக்கும் புத்தாக்க சிந்தனைக்குமிடையிலான தொடர்பு, புத்தாக்க சிந்தனையை விருத்தி செய்வதற்கான யுக்திகள் போன்றவற்றை இங்கு சற்று விரிவாக நோக்குவோம்.

**மாணவர்களும் புத்தாக்க சிந்தனையும்**

அண்மைக் காலமாக எமது மாணவர்களின் புத்தாக்க சிந்தனை மற்றும் புத்தாக்கத்திறன் விருத்தியடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. பாடசாலையின் பாடத்திட்டத்திலும் மூன்றாம் நிலைக் கல்வியின் கலைத் திட்டத்திலும் தொழிநுட்பவியல் பாடம் அறிமுகப் படுத்தப்பட்டமை, இலங்கையிலும் பொதுவாக முழு உலகிலும் தொழிநுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சி மற்றும் நாளாந்த வாழ்க்கையை நகர்த்திச் செல்வதில் நாளுக்கு நாள் மனித சமூகம் எதிர்நோக்கும் சிக்கல் தன்மை போன்றன இதற்குக் காரணமாக அமைந்தன எனலாம்.

தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி மனிதன் தமது அன்றாட நடவடிக்கைகளை இலகுவாகக் கொண்டு செல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றான். இதன் விளைவாக புத்தாக்க சிந்தனை மற்றும் புத்தாக்கத் திறன் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன என்பதே இன்றைய நிதர்சனம்.

புத்தாக்க சிந்தனை, அதன் அடியொட்டி வளரக் கூடிய புத்தாக்கத் திறன் என்பற்றுக்கான சிறந்த பருவமாக குழந்தைப் பருவத்தைக் குறிப்பிடலாம். எனினும், மாணவப் பருவமும் மிகப் பொருத்தமானதாகும். இப்பருவத்தைத் தாண்டும்போது சுதந்திரமாகச் சிந்திப்பதற்கோ, செயற்படுவதற்கோ, புத்தாக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கோ அவகாசம் கிடைப்பது குறைவே. எனவே, பள்ளிப் பருவத்தில் உங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள், வசதி வாய்ப்புகள், வழிகாட்டல், ஆலோசனைகள், எதிர்நோக்கும் சவால்கள் என்பவற்றைப் பயன்படுத்தி புதிய படைப்புக்களை வெளிக்கொண்டு வருவதன் மூலமாக நீங்களும் வரலாற்று மனிதர்களாக மாறலாம்.

**புத்தாக்க சிந்தனை மற்றும் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகள்**

இன்று குறிப்பாக, பாடசாலைகளிலும் பாடசாலைக்கு வெளியிலும் சவால் மிக்க பல தேவைகள் குவிந்த வண்ணம் உள்ளன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இத்தேவைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கும் கண்டுபிடிப்புக்களில் முனைப்புடன் ஈடுபடலாம். அவ்வாறு எமக்கு முன்னாலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால் மிக்க சில தேவைகள் அல்லது பிரச்சினைகள்:

1. பாடசாலைக் கழிவுகளைப் பயன்படுத்தி பாடசாலையின் ஆய்வு கூடங்களுக்குத் தேவையான மின்சாரம் மற்றும் எரிவாயுக்களை மிக இலகுவாக, குறைந்த செலவில் தயாரிப்பது எப்படி?
2. இயற்கையாகக் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி சிறுவர் நேயமிக்க, கற்றலுக்கு உகந்த சூழலாக பாடசாலை வளாகத்தையும் வகுப்பறைகளையும் மாற்றியமைப்பது எவ்வாறு?
3. பள்ளிவாசல்கள் மற்றும் பாடசாலைகளிலுள்ள பள்ளிவாசல்களில் 'வுழு' என்ற மார்க்கக் கடமையை நிறைவேற்றும் சந்தர்ப்பங்களில் விரயமாகும் நீரைச் சேமித்து, தேவையான மாற்றங்களுக்குட்படுத்தி அவற்றை பள்ளிவாசல் வளாகங்களிலும் பாடசாலை வளாகங்களிலும் காணப்படக் கூடிய பூந்தோட்டம், கனி தரும் மரங்கள் போன்றவற்றுக்கு கிரமமாக நீர் கிடைக்கும் வகையில் புதிய வழிமுறைகளை அறிமுகம் செய்தல்.
4. வாகன விபத்துக்களால் ஏற்படக் கூடிய உயிரிழப்புக்களின் எண்ணிக்கை இன்று அதிகரித்த வண்ணமே உள்ளன. இதனைக் குறைக்க புதிய வழிமுறைகளை அறிமுகம் செய்தல்.
5. சூழல் மாசடைதல் என்பது அதிகரித்து வரும் பிரமாண்டமான ஓர் அச்சுறுத்தலாகும். அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான திட்டங்களை அறிமுகம் செய்தல்.
6. விவசாயத்திற்காகப் பயன்படுத்தும் கிருமிநாசினிகளும் உர வகைகளும் மக்களின் உயிரைப் பறிக்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ளன. இவற்றுக்கு மாற்றீடாக என்ன செய்யலாம்?

சிந்தனையைத் தூண்டுவதற்கான மிகச் சாதாரணமான சில உதாரணங்களே இவை. இது போன்று சமூகம், அரசியல், பொருளாதாரம், தொழிநுட்பம், சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து என பல்வேறு துறைகளிலும் நாமும் எமது நாடும் பல சவால்களை முறியடித்து முன்னேற வேண்டிய தேவை காணப்படுகின்றது. இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கான புத்தாக்க சிந்தனை, புத்தாக்கத் திறன் மற்றும் புத்தாக்கச் செயற்பாடுகள் என்பன மாணவப் பருவத்திலிருந்தே உருவாக வேண்டும்.

அன்புக்குரிய மாணவர்களே! முயற்சிகள் யாவும் ஏதாவது ஒரு துறையில் புதிய விடயமொன்றை இந்த உலகுக்கு விட்டுச் செல்லும் விடயத்தில் ஈடுபடுத்தப்படுமானால் நிச்சயமாக உங்களுடைய வாழக்கைக்கு அர்த்தமும் நாம் வாழ்ந்த நாட்டுக்கு செய்த ஒத்துழைப்புமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தவிர, எமது தனிப்பட்ட வாழக்கை, குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை, தொழில் வாழ்க்கை என பல்வேறு தளங்களிலும் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் சவால்களையும் இலகுவாகக் கையாண்டு சுமுகமான வாழ்க்கையொன்றை முன்னெடுக்கலாம்.

புத்தாக்க சிந்தனையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள்:

1. ஆக்கபூர்வமான படைப்பாற்றல், சிந்தனைத் திறன் கொண்டவர்களின் புதிய படைப்புகளைப் பற்றி வாசியுங்கள் அல்லது பார்த்து, கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

பாடசாலையில் கல்வி பயிலும் எத்தனையோ மாணவர்கள் தமது புத்தாக்கத் திறமைகளை வெளிக்கொணர்ந்த வண்ணம் இருக்கின்றனர். உதாரணமாக; கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை மாணவன் ஒருவனின் சூரிய சக்தி மூலம் இயங்கும் கிருமிநாசினி தெளிக்கும் கருவியைக் குறிப்பிடலாம். இலங்கை மாணவர்களினதும் இளம் சாதனையாளர்களினதும் இவ்வாறான புதிய படைப்புக்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவை பற்றி அடிக்கடி வாசிப்பதும் கேட்பதும் அவ்வாறான படைப்புக்களின் காணொளிகளைப் பார்ப்பதும் புத்தாக்க சிந்தனையைத் தூண்டும் அம்சங்களாகும்.


2. தொடர்ச்சியாக சிந்தனைக் கிளறலில் (Brainstorm) ஈடுபடுங்கள். இங்கு சிந்தனைக் கிளறல் என்பது ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான, சாத்தியமான பல கருத்துக்களை, சிந்தனைகளை முன்வைக்கும் ஒரு செயன்முறையாகும். இதைத் தனியாகவோ அல்லது குழுவாக இருந்து செய்ய முடியும்.
3. கையில் அல்லது உங்களுடைய பையில் எப்போதும் ஒரு குறிப்புப் புத்தகம், பேனையை வைத்துக் கொள்ளுங்கள். சிறந்த, பயனுள்ள, உங்களுடைய சவால்களைச் சமாளிக்க, பிரச்சினைகளைத் தீர்க்கப் பொருத்தமான யோசனைகள் உங்களுக்கு வரும்போது அவற்றைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொள்ளுங்கள்.

தொடரும்...




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்

## அகரம் ஸ்போட்ஸ்



விரைவு - உயர்வு - துணிவு

## டெஸ்ட் போட்டிக்கு 140 வருடங்கள்



1877 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. முதலாவது டெஸ்ட் போட்டி அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக் கிடையில் மெல்போனில் நடைபெற்றது. இதில் 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது. இந்நிலையில், முதல் டெஸ்ட் போட்டிகள் இடம்பெற்று 140 வருடங் களை நினைவுகூரும் வகையில் கூகுள் நிறுவனம் டூடுல் ஒன்றை வெளியிட்டுள்ளது. இது கிரிக் கெட் விளையாட்டு வீரர்களின் தோற்றத்தோடு வடிவமைக் கப்பட்டுள்ளது.


## விளையாட்டுத் தகவல்கள்

- ❖ கிரிக்கெட்டின் தாயகம் - இங்கிலாந்து
- ❖ கிரிக்கெட்டில் விக்கட் அறிமுகமானது - 1870
- ❖ கிரிக்கெட் தொடர்பான தகவல்களைத் தரும் சஞ்சிகை - விஸ்டன்
- ❖ கனவான்களின் விளையாட்டு என வர்ணிக் கப்படுவது - கிரிக்கெட்
- ❖ முதலாவது சர்வதேச ஒரு நாள் போட்டிகள் நடைபெற்ற ஆண்டு - 1971

## 2026 உலக கால்பந்து போட்டியில் ஆபிரிக்க அணிகளின் பங்கேற்பு அதிகரிக்கும் - FIFA

உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளில் அதிக நாடுகளை பங்கேற்கச் செய்யும் விரிவாக்கம் மூலம், ஏழு அணிகளுக்கு மேலாக ஆபிரிக்க நாடு களில் இருந்து பங்குகொள்ள முடியும் என்று உலக கால்பந்து போட்டியின் நிர்வாக அமைப்பான, கால்பந்து சங்கங்களின் சர்வதேச கூட்டமைப்பின் (FIFA) தலைவர் ஜானி இன்ஃபான்டீனோ தெரி வித்திருக்கிறார். இந்த விரிவாக்கத் திட்டத்தின் மூலம், உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் தற்போது பங்கு கொள்ளும் 32 அணிகளுக்கு பதிலாக, 2026 ஆம் ஆண்டு 48 அணிகள் பங்கு பெறும். இப்போது ஆபிரிக்காவிலிருந்து 5 கால்பந்து அணிகள் உலகக் கோப்பை போட்டி களில் கலந்து கொள்வதும் குறிப்பிடத்தக்கது.

## முகாமையாளராக அசங்க குருசிங்க நியமனம்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அசங்க குருசிங்க இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அசங்க குருசிங்கவை எளிதில் யாரும் மறக்க முடியாது. காரணம், கடந்த 1996 இல் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டியில் அவர் பங்களிப்பு மகத்தானது.

இறுதிப் போட்டியில் இலங்கை வீரர் அரவிந்த டி சில்வாவுடன் குருசிங்க திறமையாக விளையாடி அணியை வெற்றி பெறச் செய்தார். மொத்தம் 41 டெஸ்ட் மற்றும் 147 ஒரு நாள் போட்டிகளில் குருசிங்க பங்கேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2022 இல் தென்னாபிரிக்காவில் பொதுநலவாய போட்டிகள் நடைபெற மாட்டாது

2022 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க டர்பன் நகரில் நடைபெற இருந்த பொதுநலவாய போட்டிகளை நடத்துவதற்கு தமது நாடு தயாரில்லை என தென்னாபிரிக்கா அறிவித்துள்ளது. பொருளாதார நெருக்கடி மற்றும் டர்பன் நகரின் போதிய வசதியின்மை, அனுசரணையாளர்களின் பற்றாக்குறை என்பனவே இப்போட்டியிலிருந்து தாம் விலகிக் கொள்வதற்கு பிரதான காரணம் என தென்னாபிரிக்க விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இந்நிலையில், குறித்த போட்டிகளை நடத்துவதற்கு இந்திய ஒலிம்பிக் சங்கம் ஆர்வப் கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



## 100 ஆவது டெஸ்டில் சாதித்தது பங்களாதேஷ்

இரண்டாயிரமாம் ஆண்டு இந்திய அணிக்கு எதிராக தனது டெஸ்ட் பயணத்தினை ஆரம்பித்த பங்களாதேஷ் பல சோதனைகளுடனும் சில சாதனைகளுடனும் கடந்த மாதம் இலங்கை அணியுடன் 100 ஆவது டெஸ்ட் போட்டியினை விளையாடியது. இதுவரை 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பங்களாதேஷ் 8 போட்டிகளில் வெற்றியையும் 76 போட்டிகளில் தோல்வியையும் பெற்றுள்ளது. 15 போட்டிகள் சமநிலையிலும் நிறைவடைந்துள்ளன. பங்களாதேஷில் வைத்து இங்கிலாந்து அணியை வெற்றி கொண்டது பங்களாதேஷ் கிரிக்கெட்டின் ஒரு சாதனை துளியாக பதிவாகியுள்ளது. இலங்கை அணியினை 100 ஆவது டெனஸ்டில் வெற்றி கொண்டது மூலம் தொடரை 1-1 என சமநிலைப் படுத்தியதுடன், 100 ஆவது போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. தமீம் இக்பால் ஆட்ட நாயகன் விருதையும் சாஹிப் அல்ஹசன் தொடர் நாயகன் விருதையும் தட்டிச் சென்றனர்.

## ரங்கன ஹேரத் உலக சாதனை



கடந்த இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 259 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது. 457 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 197 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது. பந்து வீச்சில் இலங்கை அணித் தலைவர் ரங்கன ஹேரத் 6 விக்கட்டுகளைக் கைப்பற்றியதுடன், அதிகூடிய விக்கட்டுகளைக் கைப்பற்றிய இடதுகை சுழல் பந்து வீச்சாளர் என்ற சாதனையையும் நிகழ்த்தியுள்ளார். இதற்கு முன்னர் நியூஸிலாந்து அணியின் டேனியல் விட்டோரி 362 விக்கட்டுகளைக் கைப்பற்றி குறித்த சாதனையைத் தக்கவைத்திருந்தார். இந்நிலையில், 363 விக்கட்டுகளைக் கைப்பற்றி ஹேரத் குறித்த சாதனையை முறியடித்துள்ளார்.



## அவுஸ்திரேலியாவுக்கு 800 ஆவது டெஸ்ட்

கடந்த மாதம் இந்தியா ராஞ்சியில் தொடங்கிய டெஸ்ட் போட்டி, அவுஸ்திரேலியாவுக்கு 800 ஆவது டெஸ்ட் ஆகும். 800 ஆவது டெஸ்டில் விளையாடிய 2 ஆவது நாடு ஆஸ்திரேலியா ஆகும். இங்கிலாந்து அணி 983 டெஸ்டில் விளையாடி முதல் இடத்தில் உள்ளது.

அவுஸ்திரேலியா 1877 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி மெல்போர்ன் மைதானத்தில் இங்கிலாந்துக்கு எதிராக தனது முதல் டெஸ்டில் விளையாடியது. 140 ஆண்டு கால வரலாற்றில் அவுஸ்திரேலியா 800 ஆவது டெஸ்டில் அடியெடுத்து வைக்கிறது. அந்த அணி 377 டெஸ்டில் வெற்றி பெற்றது. 214 ஆல் தோல்வியைத் தழுவியது. 206 டெஸ்டில் வெற்றி- தோல்வியின்றி நிறைவடைந்தது. 2 போட்டிகள் சமநிலையில் முடிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே உனக்காக!

இரத்தக் கட்டியாய் இருந்த என்னை
இறைவன் பெண்ணாய்
வடிவமைத்தபோது என் சிறகுகள்
முளைத்தன உன் கருவறையில்
நான் வடிவங்காண வளைந்தபோது
எல்லாம் நீ வலி தாங்கிக் கொண்டாய்
உனக்காக நான் வருவேன் என்ற
எதிர்பார்ப்புடன்

பத்து மாதங்கள் பாசமில்லாமல்
வேதனை தந்தேன் – ஆனால்
நான் இப்போது வெளிவருகிறேன்
பத்துத் திசைகளில் உன் வேதனைகளை
பதித்துவிட்டு புன்முறுவலோடு என்னை
வரவேற்கிறாய்
எதுவும் தெரியாமல்

நான் முணுமுணுத்த போது
முலைப்பால் தந்து என்னை
முத்தமிட்ட என் தாயே!

காலங்கள் கடந்தாலும் கண்ணீரோடு
வடிக்கிறேன் உனக்காய்
இவ்வுலகில் உன்னை கருவிழியாய்
வைத்து இமையாய் நானிருந்து
காக்க வேண்டுமென நினைத்தேன்
ஆனால் ரஹ்மானே!
நாளை ஜன்னதுள் பிர்தௌஸில்
என்னையும் என் தாயையும்
இணைத்து விடு!
காலம் பூராகவும் அவள் நெஞ்சில்
நான் தலைசாய வழி செய்துவிடு!

✍ தஸ்கரை ஷப்னா நிஸ்தார்

---

# கை கோர்ப்போம்!!

இறை தீனை பயின்றிட
ஒன்றுசேர்வோம் நாம்
சமூகத்தை கட்டியெழுப்ப
கலந்திடுவோம் நாம்

துயரத்தை துளிர்த்திட
துணிந்திடுவோம் நாம்
மார்க்கத்தின் வழிமுறையில்
வாழ்ந்திடுவோம் நாம்
சுவனத்தின் வெற்றிக்காய்
கைகோர்ப்போம் நாம்

✍ எம்.பீ. அமல் பசீர்
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.

# நிலையான தங்குமிடம் சுவனம் வேண்டும்

இறைவா!
சுவனத்தில் எனக்கோர்
இல்லம் வேண்டும் – அதில் நான்
இன்பம் காண வேண்டும்

என் பிறப்பின் ஆரம்பம் முதல்
எனக்கு ஊட்டப்பட்டதும்
இப்புவி இறை பூமியாய் மாற
இறை பணி புரிய வேண்டும் என்றே!

ஓயாது என் உள்ளம்
சோராது என்னுடம்பு
இறைவா!
உன் உதவி இருக்கும் வரை
என்னுடலின் ஒரு துளி வியர்வையும்
தீன் நிலைபெற வேண்டும்
என்பதற்காகவே!
இதன் மூலம் என்னுடல்
சுவனக் காற்றை
சுவாசிக்க வேண்டும்
இன்ஷா அல்லாஹ்

✍ எம்.என். நதா
மேர்சி வளாகம்

## பேசும் கவிதை - இல 24



- ✍ படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- ✍ கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- ✍ எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- ✍ கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 ஏப்ரல் 25**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

## முதலிடம் பெற்ற கவிதை

### ஒற்றுமை

விரலிடை இடைவெளிகள் கூட
வில்லங்கமாக்கிடும்
நம் ஒற்றுமைக்கு
வேற்றுமை துறந்து
கரத்தையும் கல்புகளையும்
இறுக்கமாய் பற்றிக்
கொள்வோம்

**எம்.டீ.எப். ஸைனப்**
**ஸாஹிரா கல்லூரி,**
**கம்பளை**

### வெற்றி

யுத்தம் தொலைந்திட
சமாதானம் மலர்ந்திட
நாளைய நிம்மதிக்காய்
இன்று - கைகோர்த்திடும்
இதயங்கள்

**எம்.ஐ.எம். மஹ்தி**
**ஹில்கன்றி ச.பா.**
**மடவளை**

### சிட்டுக்கள்

ஒற்றுமையின் சிட்டுக்கள்
ஒன்றிணைவோம் கரங்களால்
சேர்ந்திருப்போம் எந்நாளும்
சேர்ந்து வரும்
வெற்றியும் சந்தோஷமும்

**ஹஸ்பான் மசூத்**
**கல்பானவ மு.வி.**
**நிகவெரட்டிய**

### எம் முகவரி

கலையாது கைகோர்ப்போம்
பிரியாது பிணைந்திடுவோம்
ஒற்றுமையே
எம் முகவரியாகிட

**ஹஸீனா நாஜிப்**
**மு.ம.கல்லூரி**
**கள் எளிய**

### மனிதம் உயர்ந்திட

ஒற்றுமை கரம் கோர்ப்போம்
உயிர்த்திட வழி சமைப்போம்
கற்பவர் நாம் இணைந்து
கஷ்டப்படுபவர் குறை தீர்ப்போம்
பேதங்கள் மறந்து
இலங்கையர் என மொழிவோம்

**அஸ்ரித் முஹமட்**
**அல்அஸ்ஹர் ம.வி.**
**கதுறுவெல**

### ஒரே ஓசை

ஒற்றுமை எனும்
பலத்தை
ஒன்றுசேர்ந்து
உரைப்போம்
வேற்றுமை எனும்
பண்பை
இன்றிலிருந்து
தவிர்ப்போம்
நாளைய விடியலில்
கரம் கோர்த்து
நிற்போம்

**ஸாலிஹ் சித்தீக்கா**
**நேரியக்குளம்,**
**வவுனியா**

### ஒற்றுமை ஓங்கட்டும்

கவலை எங்கும்
ஒழிந்திட்டும்
ஒன்றாய் மக்கள்
வாழ்த்திட்டும்
ஒற்றுமை எங்கும்
ஓங்கிடட்டும்
நலமுடன் மக்கள்
வாழ்ந்திடட்டும்

**ஹஸ்பா மசூத்**
**கல்பானவ மு.ம.வி.**
**நிகவெரட்டிய**

### கரம் பற்றி

கரம் பற்றி
உரம் சேர்ப்போம்
உறவுகள்
வாழவும்
வளரவும்

**பாத்திமா நுஹா**
**அல்ஹுதா மு.ம.வி.**
**ரித்தீகம**

### மாந்தர் மகிழ...

மனங்கள் மாற
மனிதம் தழைக்க
மாநிலம் செழிக்க
மறையனும்
வேற்றுமை
மலரனும்
ஒற்றுமை

**அஸ்மா மஸாஹிம்**
**அல்பஹ்ரியா ம.க.**
**தொட்டவத்தை**

### வெற்றி

ஒற்றுமையை நிலைநாட்ட
ஒரே தேசத்தின் மக்களாய்
ஒன்றிணைவோம்...
மொழி, குலபேதம்
மறந்து புது உலகம் படைப்போம்

**எம்.ஆர்.எப். ஸஹ்றா**
**லோயல் ம.கல்லூரி**
**ரஜவெல்ல**

### கரங்கள் இணையட்டும்

இணைந்த கரங்கள்
இதயங்கள் மகிழட்டும்
வேற்றுமை களைந்திட
வேகமாய் பிணையட்டும்
உள்ளங்கள் ஒன்றானால்
உறவுகளும் நிலைக்கும்

**பி.எம்.எப். பஸ்ரா**
**அபுகாகம மு.ம.வி.**
**நிகவெரட்டிய**

### அடிமரம்

ஒற்றை வஹி
ஒரு பெரும் மரம்
பல கரம் பற்றி
அடிமரம் சூழ...
வெற்றியின் கனிகள்
இனி விற்கப்படும்
எம் கரங்களால்

**எம்.வை. அல்ஜஸ்**
**கட்டுவன்வில மு.க.வி.**

### வாழட்டும்

வெள்ளை உள்ளங்கள்
ஒன்றாய் சேர்ந்து
உழைப்போம்
இம்மையிலும்
மறுமையிலும்
வெற்றி பெறுவதற்கு

**பாத்திமா மின்ஹா**
**கெகுணகொல்ல தே.பா.**


**கரமிருந்தும் இடம்பிடிக்கத் தவறியவை...**

எம்.எப்.எம். பஹறாத், அநுரடெனியல் கம, தெல்தோட்டை.
அஹமட் அர்ஹம் அஸீம், கம்பளை ஸாஹிரா கல்லூரி.
ஆக்கிலா அஷ்ர.்.ப், ஆஇஷா ஸித்தீக்கா, மாவனல்லை.
வை.ஏ.எப். அனூஸா, எருக்கலம்பிட்டி ம.ம.வி.
எம்.எச்.எப். பஹீமா, ஸமகிவத்த, காலி.
ரயீஷா இல்யாஸ், முன்னேக்குளம்.
ஏ.எப். அப்லா, எருக்கலம்பிட்டி ம.ம.வி.
எப்.என். சஹ்னா பேகம், கொத்தாந்தீவு மு.ம.வி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✍ ஸியெம்மே அமீன்



# குரங்கும் தவளையும்

முன்னொரு காலத்திலே புனுஇ என்ற பெயருடைய ஓர் அரசன் இருந்தான். நாலா புறமும் அவனுடைய ராஜ்யம் வியாபித்திருந்தது. அந்த அரசனுக்கு ஒரு குரங்கும் ஒரு தவளையும் வேலைக்காரர்களாக இருந்தன. குரங்கு ஓர் ஏமாற்றுக்காரப் பேர்வழி. அது எப்போது தனக்கு அரசனைக் கொல்வதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கும் என்று எதிர்பார்த்திருந்தது. தான் அரசனாகும் கனவில் அது மிதந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் அரசன் குரங்கைக் கூப்பிட்டு காட்டிலிருந்து இனிமையான பழங்களை எடுத்து வருமாறு சொன்னான். அத்தோடு, தவளைக்கு ஆற்றிலிருந்து மீன் பிடித்து வருமாறு கட்டளையிட்டான். கட்டளை கிடைத்ததுதான் தாமதம். இரண்டும் தத்தம் வேலையைச் செய்யப் புறப்பட்டுச் சென்றன.

குரங்கு காட்டுக்குச் சென்றது. இனிய பழங்களைப் பறித்துத் தின்னத் தொடங்கியது. அதனுடைய வயிறு நிறைந்ததும் மரத்திலிருந்து கீழே இறங்கி நித்திரை செய்தது. தவளையோ கடுமையான முயற்சியோடு மீன் பிடிப்பதில் ஈடுபட்டிருந்தது.

சூரியன் மறைந்த பிறகுதான் குரங்கின் நித்திரை கலைந்தது. பழம் கொண்டு வராததற்காக அரசன் தன்னை தண்டிப்பான் என்று அது யோசித்தது. உடனே தனது உடலெங்கும் சேற்றைப் பூசிக் கொண்டு அரச மாளிகையை நோக்கிப் போனது.

இடைவழியில் அது தவளையைச் சந்தித்தது. தவளை பெருந்தொகையான மீன்களுடன் சென்று கொண்டிருந்தது. தந்திரமான குரங்கு இதைக் கண்டு திகைத்தது. தவளையைத் தன்னுடைய பக்தனாகக் கருதி அரசன் அதற்கு உயர்ந்த ஸ்தானம் கொடுத்துவிடக் கூடாது என்று குரங்கு நினைத்துக் கொண்டது. அப்படியானால், நான் என்ன செய்வது? எனக்கு எந்த மரியாதையும் கிடைக்காது, நான் ஏதாவது செய்தாக வேண்டும் என்று அது எண்ணியது.

இரண்டும் நடந்தவாறு ஓர் ஆற்றங்கரையை அடைந்தன. குரங்கு தவளையை மீன்களோடு சேர்த்து ஆற்றுக்குள் தள்ளி விட்டது. எல்லா மீன்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. தவளை மிகவும் கஷ்டத்தோடு ஆற்றிலிருந்து வெளிவந்தது. குரங்கு மிக அன்போடு தவளையை நோக்கி, ''எனது பிரியமான நண்பனே, கவலைப்படுவதற்கு எதுவுமில்லை. என்னால் ஒரு மீனையாவது பிடிக்க முடியவில்லை என்று நீ அரசனிடம் சொல். அப்படியிருக்கும்போது எப்படி மீன் கொண்டு வர முடியும்?''

குரங்கு மீண்டும் சொன்னது, ''நண்பா, நீ ஏன் இப்படி நிராசையடைகிறாய்? நானே இந்த அரசனைக் கொல்லும் முறையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்துக் கொண்டிருக்கிறேன். அரசனைக் கொன்ற பிறகு நான்தான் அரசனாவேன். உனக்கு இந்த ராஜ்யத்திலே மிக உயர்ந்த பதவியைத் தருவேன். நீ இப்படியான உதவாக்கரை அரசனைப் பற்றி சிறிதும் கவலைப்படாதே.''

இரண்டும் அரசனிடம் சென்றன. தம்மால் எதுவுமே கொண்டு வர முடியவில்லை என்று இரண்டுமே வெளிப்படையாகக் கூறின.

குரங்கு படுபோக்கிரியாக இருந்தது. அது அரசனை நோக்கி, ''ராஜனே, என்னைப் பொறுத்தவரை நான் எவ்வளவோ முயற்சி செய்தேன். மரங்கள் பலவற்றைத் தடவித் தடவிப் பார்த்தேன். எதுவுமே கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு மரத்தில் ஏறிக் கொண்டிருக்கும்போது மரக்கிளை உடைந்து கீழே இருந்த குளத்துக்குள் விழுந்து விட்டேன். எனது முழு உடலும் நோகிறது. எனது உடம்பைப் பாருங்கள், எவ்வளவு சேறு படிந்திருக்கிறது. எனவே, என்னால் எதுவும் கொண்டு வர முடியவில்லை'' என்று சொன்னது.

மறுபடி சொன்னது: ''மகாராஜா, நான் எவ்வளவு துன்பத்துக்குள்ளானேன். இந்தத் தவளையைக் கொஞ்சம் பாருங்கள். தவளையார் மிகவும் சுத்தமாக வந்திருக்கிறார். குளிப்பதிலேயே முழு நாளையும் இவர் கழித்திருக்கலாம். இவர் சிறிதேனும் முயற்சி செய்திருந்தால், இவ்வளவு துப்புரவாக எப்படி இருக்க முடியும்?''

அரசன் இரண்டையும் பார்த்தான். தவளை மீது அவனுக்குப் பொல்லாத கோபம் வந்தது. தவளையின் தலைக்குப் பலமாக அறை கொடுத்தான்.

தவளை மிகவும் துயரத்துக்குள்ளானது. குரங்கு என்ன செய்தது, என்ன செய்ய விரும்புகிறது என்று அரசனிடம் கூறியது.

அன்றிலிருந்து தவளை கோபப்பட்டு ஆற்றிலே சென்று வாழத் தொடங்கியது.

ஒரு நாள் அந்தக் குரங்கு காட்டிலே தனது உறவினர்களிடம் சென்றது. அது அரசனுக்கு எதிராக ஒரு படையைத் தயார் செய்தது. எல்லாக் குரங்குகளுக்கும் அது ஆயுதங்களைக் கொடுத்தது. அரசனைக் கொல்வதாக அவை தீர்மானித்துக் கொண்டன.

இதனைக் கேள்வியுற்ற அரசன் கறுப்பு நிற மையைத் தயார் செய்தான். தனது முகத்தில் அந்தக் கறுப்பு மையைப் பூசிக் கொண்டு தனது எதிரிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

குரங்கு தனியாக மாளிகைக்குள் வந்தது. அதனுடைய படை வெளியே மரங்கள் மீது ஒளிந்து கொண்டிருந்தது. குரங்கு அரசனுடைய முகத்தில் அந்தக் கறுப்பு நிறத்தைக் கண்டதும் மிகவும் மனம் மகிழ்ந்தது. ''நீங்கள் இந்த நிற மையை எங்கிருந்து எடுத்தீர்கள்? எனக்கும் அதில் கொஞ்சம் தாருங்களேன்'' என்று கேட்டது.

அரசன் சொன்னான், ''நான் பெரியதொரு மரப்பொந்துக்குள் போனேன். அந்த மரப்பொந்தை வெளிப்புறத்தால் அடைத்து விட்டு பின்னர் விறகு சேர்த்து வந்து நெருப்பு மூட்டு என்று எனது வேலைக்காரர்களிடம் சொன்னேன். அவர்கள் அப்படியே செய்தார்கள். புகை மூட்டத்தின் காரணமாக எனது முகம் அப்படியாகி விட்டது. நீயும் அப்படியான அழகை விரும்பினால், உனக்கும் அதையே செய்ய வேண்டிவரும்.''

குரங்கு அதனை ஏற்றுக் கொண்டது. அதற்கும் அழகாக இருக்க வேண்டும் என்ற ஆசை. அது அரசனாவதற்கு முன்பு அழகானதாக இருக்க வேண்டும் என்று விரும்பியது.

குரங்கு தனது உறவினர்கள் அனைவரதும் உதவியோடு பெருந்தொகையான விறகு சேர்த்து பொந்து இருந்த மரத்தடியில் வைத்தது.

அரசனும் அவனுடைய சேவகர்களும் கயிற்றினால் ஒவ்வொரு குரங்கையும் கட்டி மரப்பொந்துக்குள் போட்டார்கள். எல்லாக் குரங்குகளும் மரப்பொந்துக்குள் போடப்பட்டதும் நெருப்பு மூட்டப்பட்டது. உள்ளிருந்த குரங்குகள், ''நாங்கள் போதுமான அளவு கறுப்பாகி விட்டோம், எங்களை வெளியே எடுத்து விடுங்கள்'' என்று கத்தின. ஆனால், அரசனோ எல்லாக் குரங்குகளும் எரிந்து சாம்பலாகிய பிறகுதான் மனச்சாந்தி பெற்றான்.

**(இந்திய அருணாசலப் பிரதேச கிராமியக் கதை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில்,எம்.எம். முபாரக்

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

1. புலியின் நடத்தைப்பாங்கைக் காட்டும் பிராணி எது?
   i. நாய் ii. பூனை
   iii. கீரி iv. ஓநாய்

2. நீர்நிலைகளில் அண்டி வாழும் பிராணி அல்லாதது?
   i. மீன்கொத்தி ii. ஆட்காட்டி
   iii. நாரை iv. குயில்

3. வீட்டுத் தோட்டத்தில் இரவில் உலாவித் திரியும் மஞ்சள் நிறமுட்டையிடும் பிராணி?
   i. தவளை ii. மயிர்கொட்டி
   iii. நத்தை iv. ஓணான்

4. ஆடு, மாடு போன்றவற்றின் உடலில் தங்கி வாழும் பிராணி எது?
   i. நுளம்பு ii. உண்ணிகள்
   iii. இலையான்கள் iv. மூட்டைப்பூச்சி

5. பூச்சிகள் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு இடம்பெயர்ந்து செல்ல உதவுவது?
   i. செட்டைகள் ii. கால்கள்
   iii. இறகுகள் iv. தலைகள்

6. தூரத்தில் இருந்தவாறு தனது இரையைக் கண்டுபிடித்துண்ணும் பிராணி எது?
   i. ஆந்தை ii. பல்லி
   iii. புலி iv. கழுகு

7. பின்வரும் எந்த பிராணியின் நச்சு மயிர் உடலில் படுவதால் உடல் தடித்து வீங்கும்?
   i. தேள் ii. நுளம்பு
   iii. மயிர்க்கொட்டி iv. அட்டை

8. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி எது?
   i. சருகுமான் ii. வெளவால்
   iii. அணில் iv. காகம்

9. சிவனொளிபாதமலை காணப்படும் மாவட்டம் எது?
   i. கண்டி ii. பதுளை
   iii. இரத்தினபுரி iv. கேகாலை

10. தினமும் உடற்பயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மை அல்லாதது?
   i. அநேக நோய்கள் எம்மை அணுகாது
   ii. மகிழ்ச்சி
   iii. கட்டுக்கோப்பான உடலமைப்பு
   iv. நீண்ட ஆயுள் கிடைக்கும்

11. வடமேல் மாகாணத்திலுள்ள சரணாலயம் எது?
   i. வில்பத்து ii. யால
   iii. புத்தள iv. பின்னவல

12. மண்சரிவு ஆபத்துள்ள இடமாக அமையாதது?
   i. கொழும்பு ii. பதுளை
   iii. நுவரெலியா iv. கண்டி

13. அடையாள அட்டை தொலைந்து போனமை பற்றி முதலில் அறிவிக்க வேண்டிய இடம்?
   i. கிராம சேவையாளர் அலுவலகம்
   ii. பொலிஸ் நிலையம்
   iii. பிரதேச செயலகம்
   iv. பிரதேச சபை அலுவலகம்

14. இலைக்கஞ்சி தயாரிக்க உதவும் இலை எது?
   i. பசளி
   ii. வேம்பு
   iii. மரமஞ்சள்
   iv. கொடித்தோடை இலை

15. செடிகளில் பூத்துக் காய்க்கும் காய்கறி வகை எது?
   i. புடோல் ii. கொடித்தோடை
   iii. வெண்டி iv. பாகல்

16. பப்பாசி வித்தை ஒத்திருக்கும் வித்து எது?
   i. கடுகு ii. மிளகாய்
   iii. பயறு iv. மிளகு

17. கொடிகளில் பூத்துக் காய்க்கும் வீட்டுத் தோட்ட தாவரம் எது?
   i. பூசணி ii. நெல்லி
   iii. திராட்சை iv. ரம்புட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அதிகளவு அயடின் கொண்ட உணவு வகை எது?

i. காளான் ii. வாழைப்பழம்

iii. வல்லாரை iv. மீன், முட்டை

19. வத்தாளை கிழங்குகளில் காணப்படும் உணவின் பிரதான கூறுகள்?

i. புரதம் ii. கொழுப்பு

iii. காபோவைதரேற்று iv. விற்றமின்

20. இலங்கையில் விளையாடப்படும் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று?

i. கைப்பந்தாட்டம் ii. கிட்டிப்புல்

iii. முட்டை அடித்தல் iv. மல்யுத்தம்

21. ஒரு மூட்டையில் 20kg அரிசியுள்ளது. இதில் 7k 650g அரிசி விற்கப்பட்டால் மூட்டையில் எஞ்சியுள்ள அரிசியின் அளவு எவ்வளவு?

22. 5m நீளமுள்ள ஒரு கம்பித் துண்டிலிருந்து ஒவ்வொன்றும் 20cm நீளமுள்ள 5 துண்டுகள் வெட்டப்பட்டன. கம்பியின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் எவ்வளவு?

23. ரூபா 750 ஐ நான்கு பேருக்கு சமமாக பங்கிட்டால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பணம் எவ்வளவு?

24. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1-3-9, 3-4-7, 5-5-5, 7-6-3, ..........

i. 9-7-2 ii. 9-5-2 iii. 9-7-1

25. திங்கள், வியாழன், ஞாயிறு, புதன், ............

i. வெள்ளிக்கிழமை

ii. ஞாயிற்றுக்கிழமை

iii. சனிக்கிழமை

iv. திங்கட்கிழமை

26. 3612, 455, 7324, 674 தரப்பட்ட எண்களில் 2 ஆல், 3 ஆல், 4 ஆல் வகுபடும் எண்ணைத் தெரிவு செய்க.

27. முந்திய, பிந்திய உரோம எண்களை எழுதுக.

............ XVIII ............

28. 3/4 இற்கு பொருத்தமான சமவலு பின்னத்தைத் தெரிவு செய்க.

i. 6/10 ii. 9/12

iii. 3/8 iv. 5/8

29. சரியான கோவையை தெரிவு செய்க.

i. 100 + 175 + 125 + 50 = 580

ii. 165 + 135 + 145 = 445

iii. 165 + 125 + 165 = 445

30. பிழையான கோவையை தெரிவு செய்க.

i. 10 x 10 + 50 = 150

ii. 05 x 00 x 50 = 50

iii. 15 = 15 - 15 = 15

எண் குறியீட்டில் எழுதுக.


31. நூற்று இருபதாயிரத்து நூறு

32. இருபதாயிரத்து இருநூறு

33. 1500 மில்லி லீற்றர் பாலின் விலை ரூபா 90 எனின், 100 மில்லி லீற்றர் பாலின் விலை யாது?

34. 1.5 கிலோ கிராம் எத்தனை கிராம்?

35.



தரப்பட்ட திண்மப் பொருளின் காணக் கூடிய விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

36. ஒரு தொகைப் பணத்தின் 1/4 பங்கு ரூபா 60 எனின், இரண்டு பங்கின் பணம் எவ்வளவு?

37. 12 சென்றி மீற்றர் நீளம் 8 சென்றி மீற்றர் அகலமும் ஒரு பக்கம் கொண்ட செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க.

38. 2016 ஆம் ஆண்டு உரித்தாவது?

i. 20 ஆம் நூற்றாண்டு

ii. 21 ஆம் நூற்றாண்டு

iii. 22 ஆம் நூற்றாண்டு

39. கோலத்திற்கு ஏற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான எண்ணை தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | ... |
| 8 | 1 | 6 |

i. 4

ii. 9

iii. 7

44 ஆம் பக்கம் பார்க்க...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



**நேரம் 1 மணி 15 நிமிடம்**

**வினாப்பத்திரம் II**



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

முருகனின் மகன் சாந்தனும் பாலனின் மகன் குமாரும் நல்ல நண்பர்கள்; ஒரே வகுப்பில் படிப்பவர்கள். குமாரிலும் பார்க்க சாந்தன் மிகவும் நல்லவன். பொய், புறம் போன்ற தீய பண்புகள் அவனிடம் இல்லை. குமார் வீண் செலவு செய்வதும் தீய நண்பர்களோடு சுற்றுவதுமாக இருந்தான். இதனால் முருகன் தன் மகனுக்கு குமாரின் சகவாசம் வேண்டாம் என அறிவுரை வழங்கினார்.

1. சாந்தனையும் குமாரையும் குறிக்கும் பொருத்தமான சொல் எது?
   i. சகபாடிகள் ii. உறவினர்கள்
   iii. எதிரிகள்
2. தீய பண்புகளை உடையவன் யார்?
   i. முருகன் iii. குமார்
   iii. பாலன்
3. வீண் செலவு செய்பவனைக் குறிக்கும் சொல் எது?
   i. இடையன் ii. தோழன்
   iii. ஊதாரி
4. சாந்தனுக்கு அறிவுரை கூறியவர் சாந்தனுக்கு என்ன உறவு முறை?
   i. அப்பா ii. அண்ணா
   iii. மாமா
5. பந்தியில் இடம்பெற்ற தீய பண்புகள் எவை?
   ..........................................................

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.**

6. பொய் :..........................................
7. மகன் :..........................................
8. நண்பன் :..........................................

**பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்து தருக.**

9. நல்லது :..........................................
10. பொய் :..........................................

**பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை தமிழில் எழுதுக.**

11. நரக்க மினிஹா :..............................
12. லஸ்ஸன போல :..............................

**பின்வரும் ஆங்கில வினாக்களுக்கான சரியான விடைக்கு கோடிடுக.**

13. My Name ........ Kumar (are, is)
14. We ......... Playing (are, is)

**பின்வரும் சொற்களை அட்டவணைப்படுத்துக.**

| | | |
|---|---|---|
| தன்மை | 15. ........... | 16. ........... |
| முன்னிலை | 17. ........... | 18. ........... |
| படர்க்கை | 19. ........... | 20. ........... |

**பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துக.**

21. ராதா-பூங்கா-விட்டு-சென்றாள்-பாடசாலை
    ..........................................................
22. பழக்கம்-வரை-தொட்டிற்-சுடுகாடு
    ..........................................................

**எழுவாய்ச் சொற்களுக்கு கோடிடுக.**

23. பந்தை தம்பி அடித்தான்.
24. கழுதை பொதி சுமந்தது.
25. நாம் கல்வி கற்போம்.


**சரியான விடைக்குக் கோடிடுக.**

26. நிலம், நீர், ஆகாயம், தீ, காற்று என்பன
    (ஐம்பொறி, ஐம்புலன், ஐம்பூதம்)
27. திருவள்ளுவர் இயற்றியது?
    (பாரதி பாடல், திருக்குறள், கொன்றை வேந்தன்)
28. பின்வரும் மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.
    ஒற்றைக்காலில் நிற்றல்

**'உயிர்களிடத்தில் மிக கருணை உள்ள எனது நண்பன்' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 


அருகிலுள்ள கனவுரு வடிவான பெட்டியொன்றின் மேற்பரப்பின் மொத்தப் பரப்பளவைக் காண்க.

2. ஒரு மோட்டார் சைக்கிளில் ஒரு நகரிலிருந்து இன்னொரு நகருக்குச் சென்ற தூரம் கதிமானியில் பின்வருமாறு இருக்கிறது. |0|7|8|9|9| கிலோ மீற்றர். மோட்டார் சைக்கிள் இன்னும் ஒரு கிலோ மீற்றர் தூரம் சென்ற பின்னர் கதிமானியில் காணப்படும் வாசிப்பை கட்டங்களினுள் இடுக. | | | | | | Km

3. விமலிடம் இருந்த பணத்தொகை ரூ. 500 ஆகும். அவன் அதில் 1/2 பங்கை உணவிற்கும் மீதியில் 1/2 பங்கைகல்விக்காகவும் செலவு செய்தான் எனின், விமலன் கல்விக்காக செலவழித்த தொகை யாது?


4. விமானமொன்று காலை 9.25 இற்கு புறப்பட்டு 3 மணி 35 நிமிடப் பயணத்தின் பின்னர் இன்னுமொரு விமான நிலையத்தினை வந்தடைந்தது. விமானம் வந்திறங்கிய நேரத்தினை நியம நேரத்தில் தருக.

5. 6 மீற்றர் நீளமும் 5 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 500 மில்லி லீற்றர் பூச்சு தேவை எனின், 10 மீற்றர் நீளமும் 6 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூச எவ்வளவு பூச்சு தேவை?

6. விருந்தொன்றில் 5 பேருக்கு சமைப்பதற்கு 1 கிலோ கிராம் அரிசி தேவை எனின், அவ்விருந்தில் 32 பேர் கலந்து கொள்வாரெனின், சமைக்கத் தேவையான அரிசியின் நிலையை கிலோ கிராமில் தருக.

7. நளினா மக்கள் வங்கியில் 5000 ரூபாவினை வைப்பிலிட்டாள். அவளுக்கு மாதமொன்றுக்கு 100 ரூபாவிற்கு 20 ரூபா வட்டியாக கிடைக்குமெனில், ஒரு மாத முடிவில் அவளுக்கு கிடைக்கும் வட்டித் தொகை எவ்வளவு?

8. சுருக்குக. 2/4 + 3/12

9. 

தரப்பட்டுள்ள உருவில் 1/3 பகுதிக்கு நிறந்தீட்டுங்கள்.

10. 2 லீற்றர் பாலுக்கு 750 மில்லி லீற்றர் சீனிக் கரைசலும் 500 மில்லி லீற்றர் நீரும் சேர்த்து பால்த் தேநீர் தயாரிக்கப்பட்டது. தயாரிக்கப்பட்ட தேநீரை லீற்றர், மில்லி லீற்றரில் தருக.

**1-10 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1. கடற்கரைப் பிரதேசங்களில் வளரும் தாழை மரங்கள் காற்றினால் சரிந்து விழுவதைத் தடுக்க அவற்றில் காணப்படும் விஷேட அம்சம்.
   - i. ஆழமான வேர்த் தொகுதியைக் கொண்டிருத்தல்.
   - ii. மிண்டி வேரைக் கொண்டிருத்தல்.
   - iii. உறுதியான வேர்த் தொகுதி காணப்படுதல்
   - iv. மரங்கள் குட்டையாக வளருதல்.

2. மலைநாட்டில் பயிரிடும் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பிராணி எது?

   i. செண்பகம் ii. நத்தை
   iii. அட்டை iv. தேள்

3. பற்களின் ஆரோக்கியத்தைப் பேண பற்பசையுடன் சேர்க்கப்படும் கனியுப்பு எது?

   i. கல்சியம் ii. புளோரைட்
   iii. குளோரீன் iv. இரும்பு

4. ஒருவர் சொந்தக் கையெழுத்தினால் எழுதப்பட்ட தகவல்களையும் வரைபடங்களையும் உலகிலுள்ள எந்தவொரு நகருக்கும் அனுப்ப உதவும் நவீன தொடர்பாடல் எது?

   i. மின்னஞ்சல் ii. இணையம்
   iii. தொலைநகல் iv. ரெலெக்ஸ்

5. விட்டமின் B குறைபாட்டினால் ஏற்படும் நோய்?

   i. மாலைக்கண் ii. அனிமியா
   iii. பெரிபெரி iv. என்புருக்கி

6. இலங்கையின் மிக அழகான நீர் வீழ்ச்சியான துன்கிந்த காணப்படும் மாவட்டம் எது?

   i. பதுளை ii. இரத்தினபுரி
   iii. நுவரெலியா iv. மாத்தளை

7. துவிச்சக்கர வண்டியொன்று இரவு வேளையில் பயணிப்பதற்கு அதில் அவசியம் இருக்க வேண்டிய துணைப்பகுதி?

   i. மணி ii. ஆசனம்
   iii. தடுப்பு (பிறேக்) iv. தைனமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பகல் வேளையில் எலிவளை, புற்றுகள், கற்குவியல் போன்ற இடங்களில் மறைந் திருக்கும், இரவு வேளையில் உணவு தேடி நடமாடும் பிராணி எது?
i. எலி ii. ஆந்தை
iii. பாம்பு iv. வௌவால்

9. மனிதனின் குழந்தைப் பருவத்தில் வாய்க் குழியினுள்ளே காணப்படும் பற்களின் எண்ணிக்கை
i. 20 ii. 24
iii. 32 iv. 28

10. ராணி, வேலையாள், சோம்பேறி எனும் அங் கத்தவர்களைக் கொண்ட சமுதாய வாழி
i. வீட்டு ஈ ii. தேனீ
iii. அந்துப்பூச்சி iv. எறும்பு


விடைகள்

1. i
2. ii
3. iii
4. i
5. iii
6. உண்மை
7. புதல்வன்
8. தோழன்
9. கெட்டது
10. உண்மை
11. கெட்ட மனிதன்
12. அழகான பந்து
13. is
14. are
15. எனது
16. தனது
17. உங்கள்
18. நீங்கள்
19. கொக்கு
20. வயல்
21. ராதா பாடசாலை விட்டு பூங்கா சென்றாள்
22. தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை
23 தம்பி
24. கழுதை
25. நாம்
26. ஐம்பூதம்
27. திருக்குறள்
28. விடாப்பிடி

41ஆம் பக்கத் தொடர்...

விடைகள்

1. ii
2. iv
3. iii
4. ii
5. i
6. iv
7. iii
8. i
9. iii
10. iv
11. i
12. i
13. ii
14. i
15. iii
16. iv
17. iii
18. i
19. iii
20. ii
21. 2k 350g, 2350g
22. 4m, 400cm
23. ரூபா 18.75
24. iii
25. iii
26. 3612
27. KVII, XIX
28. ii
29. ii
30. ii
31. 120 100
32. 20 200
33. 3 ரூபாய்
34. 1500 கிராம்
35. 09
36. 480 ரூபாய்
37. 96 $cm^2$ (96 சதுர cm)
38. ii
39. iii

1. 65 $m^2$
2. 0 7 9 0 0 Km
3. ரூ. 125.00
4. 13:00 h
5. 1$l$
6. 6 Kg 400 g
7. ரூ. 100.00
8. 9/12
9. 
10. 3 $l$ 250 ml



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 20

## தலைப்பு: பறவைக் கூட்டம்

### பரிசில் பெறும் சித்திரங்கள்



எச்.ஏ. சாலிஹா
நிக/பன்னவ மு.ம.ம.



எம். ஸஹ்ரான்
நிக/கல்பானவ ம.வி.
அபுக்காகம



சபியா ஸரூக்
க/அல் ஸபா மு.ம.வி.
வத்தேகெதர


### பாராட்டுக்குரிய சித்திரங்கள்




எம். ஆஸிப்
நிக/கல்பானவ ம.வி.
அபுக்காகம



ஏ.ஜி. அஜ்மல்
நிக/கல்பானவ ம.வி.
அபுக்காகம



எம்.ஐ. பாத்திமா
கம்பளை ஸாஹிரா கல்லூரி
கம்பளை



எம்.ஐ. பிலால்
அல் பஹ்ரியா ம.க.
பாணந்துறை



ஆர்.எம். ரிஜ்வான்
அலியவெட்டுனுவெவ மு.ம.வி.
கல்கமுவ



ஹஜிஸ்ரா ஹுஸைன்
அ/கல்லஞ்சியாகம அ.மு.வி.
காகம



ஏ.ஆர்.எம். மஹ்தி
அல்அமீன் வித்தியாலயம்
காவத்தமுனை



எம்.என். அயாத் அஹமத்
நிக/கல்பானவ ம.வி.
அபுக்காகம




எம்.ஐ. ஹாலா
கம்பளை ஸாஹிரா கல்லூரி
கம்பளை





[illegible] ஸாஹிரா
[illegible] அல் ஹுமைஸர் ம.வி.
வெவகம



எஸ். சுமையா
ஏ/ஜாயா மு.ம.வி.
கடந்துகம

சிறுவர் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது..

## Islamic Book House இன் புதிய வெளியீடுகள்!

**"தரம் ஒன்று முதல் உயர்தரம் வரைக்கான உசாத்துணை நூல்கள்"**

**இஸ்லாமிக் புக் ஹவுஸின் புத்தகங்கள்..**



நியாயமான விலைகளில் தரமானவைகள்.

முன் எப்போதும் இல்லாத வகையில் பொருத்தமான, கவர்ச்சியான முன் அட்டைகளைத் தாங்கியவைகள்.

அனுபவம்மிக்க, பிரசித்தி பெற்ற தகுதிவாய்ந்த, ஆசிரியர்களால் எழுதப்பட்டவைகள்.

புதிய பாடத்திட்டத்திற்கு (2016-2017) அமைவாக உருவாக்கப்பட்டவைகள்.

தலை நகரை அடுத்து வாழும் மாணவர்களின் மேம்பாடு, நலன் கருதி இலங்கையில் உள்ள அனைத்து இடங்களிலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

www.ibh.lk வலைதளத்தின் ஊடாக Online Order மூலம் புத்தகங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

தபால் மூலமும் (VPP) பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



**YOU RING! WE BRING!**

**FREE HOME DELIVERY SERVICE**

City Limits Only / Conditions Apply

For your complete and competitive books & stationery shopping experiences..

**ISLAMIC BOOK HOUSE**

77, Dematagoda, Road, Colombo 09, Sri Lanka.
Tel: 2684851, 2669197 Fax: 0112688102 Hot Line 011 5 925 935
E-Mail ibhinfo77@gmail.com Web: www.ibh.lk

noolaham.org | aavanaham.org